வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 28.10.2021 வியாழக்கிழமை | இதழ் : 327 | பக்கங்கள் : 16




# மனிதகுல விரோத நடவடிக்கைகளுக்காக கோட்டாபய உள்ளிட்டோரை விசாரியுங்கள்

## பிரிட்டனின் 200 தமிழர்கள் ஐ. சி. சியிடம் சட்ட சமர்ப்பணம்

INTERNATIONAL CRIMINAL COURT

லண்டன், ஒக்ரோபர் 28

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கமல் குணரத்ன, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய உள்ளிட்ட பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மனிதகுல விரோத செயல்களுக்கு பொறுப்பானவர்கள். இவர்களை விசாரணை செய்து உரிய நேரத்தில் கைது செய்ய தலைமை வழக்கறிஞருக்கு அழைப்பு விடுக்கும் வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ஐ. சி. சி) நேற்று முக்கிய சட்ட சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. 15

## கோட்டாபயவுக்கு எதிராக லண்டனில் ஊடக போர்!




லண்டன், ஒக். 28

போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளில் ஈடுபட்டார் என நம்பத்தகுந்த முறையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் கிளாஸ்கோ நகருக்கு வருகின்றார் என்று ஸ்கொட்லாந்து மக்களை எச்சரிக்கும் வகையிலான முழுப் பக்க விளம்பரம் ஒன்று நேற்றுக் காலை 15

## பருத்தித்துறையில் இறந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று

வடமராட்சி, ஒக். 28

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உயிரிழந்த பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி ஜெசிகலா வசந் 15

## 'ஒரே நாடு ஒரே சட்டம்' நடைமுறை

## ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி நியமனம்

ஒரு தமிழருக்குக்கூட இடமில்லை 11

## 3 நாள்களுக்கு கடும் மழை!

கொழும்பு, ஒக். 28

நாட்டில் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு மழை வீழ்ச்சி அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அருகில் உள்ள தாழ்வான 15

## அரசியல் கண்ணோட்டத்தில் அனைத்தையும் பார்க்காதீர்!

ஞானசார தேரர் வேண்டுகோள்



கொழும்பு, ஒக். 28

அனைத்து விடயங்களையும் அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்து ஒருபோதும் தீர்வு பெற்றுக் கொள்ளமுடியாது. அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும், முரண்பாடற்ற வகையிலும் ஒரே நாடு ஒரே சட் 15

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை மூடி மறைக்கப்படவேயில்லை

அமைச்சர் சரத் வீரசேகர கூறுகிறார்



கொழும்பு, ஒக். 28

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் மூடி மறைக்கப்படுவதாக யார் மீதும் குற்றம் சுமத்த முடியாது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து 15

## மேலும் 20 பேர் மரணம்

கொழும்பு, ஒக். 28

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 20 பேர் உயிரிழந்தனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 9 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 5 ஆண்களும், 3 பெண்களுமாக 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 6 ஆண்களும், 6 பெண்களுமாக 12 பேரும் உயிரிழந்தனர். (இ)

## பயங்கரவாத சட்டம் தொடர்பில் அமெரிக்க பேரவையில் விவாதம்!

வாஷிங்டன், ஒக். 28

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பிலும், அது இலங்கையில் மனித உரிமைகள்மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் அமெரிக்க பேரவையின் மனித உரிமைகள் ஆணைக்குழு விவாதித்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் இலங்கை தொடர்பில் பேரவையின் அங்கத்தவர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் விளக்கமளிக்க அழைக்கப்பட்டிருந்தார்.

தி ரொம் லாண்டோஸ் மனித உரிமைகள் ஆணைக் 15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# அதிகளவு செயற்கை உர பாவனையை கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

புத்த பெருமானின் போதனைக்கமைய ஒழுங்கமைந்துள்ள முன்மாதிரி உரிமைகளைக் கொண்ட இலங்கை, மானுடத் தேவைகளுடன் சுற்றுச்சூழலைச் சமநிலைப்படுத்துவதன் அவசியத்தை நன்றாகப் புரிந்துகொண்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதிகளவு செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'மனிதன், பூமி மற்றும் சுபீட்சத்துக்கான காலநிலைச் செயற்பாடுகளை விருத்தி செய்தல்' என்ற தலைப்பிலான அரச தலைவர்கள் கலந்துரையாடலில், காணொலி தொழில்நுட்பத்தின் மூலம் நேற்று உரையாற்றும்போதே, ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச ரீதியிலான நிலக்கரியற்ற புதிய சக்தி வலு மாநாட்டின் இணைத் தலைவராக இருப்பதையிட்டு இலங்கை பெருமையடைகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ பிரகடனத்தின் கீழ், சதுப்பு நிலச் சுற்றாடல் கட்டமைப்பு மற்றும் ஜீவனோபாயம் தொடர்பான செயற்பாட்டுக் குழுவுக்கும் இலங்கை தலைமை வகிக்கின்றது.

பசுமை நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான கொழும்பு அறிக்கையின் பிரகாரம், நைதரசன் வாயு வெளியீட்டின் அளவை 2030ஆம் ஆண்டாகும்போது அரைவாசியாகக் குறைப்பதற்கு இலங்கை முயற்சி எடுத்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டுக் கொள்கையின் வரையறை, மேலாண்மை பற்றி அவதானம் செலுத்தி உள்ளமையை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக, அதிகளவு செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதைக்



கட்டுப்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதோடு, அதன்மூலம் சுகாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதுடன், நைதரசன் கழிவுகளை குறைத்துக் கொள்ளவும் முடியும்.

இலங்கையில் காபன் அளவை 2050ஆம் ஆண்டாகும்போது பூச்சியமாக்கிக் கொள்ள எதிர்பார்த்துள்ளதோடு, 2030ஆம் ஆண்டாகும்போது இந்த நாட்டின் சக்தி வலுத் தேவையில் 70 சதவீதத்தை மீள்பிறப்பாக்கச் சக்தி மூலங்கள் மூலம் நிறைவு செய்துகொள்ளும் இலக்கை அடைந்துகொள்வதற்காக இலங்கை பயணித்துக்கொண்டிருக்கிறது-என்றார். (அ)

# சீனாவின் உர கப்பலை திருப்பி அனுப்புவோம்!

## மஹிந்தானந்த அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28

"நச்சு கலந்திருப்பதாக சொல்லப்படும் சேதனப் பசளையைக் கொண்ட சீனக் கப்பலை இலங்கைக்குள் வர அனுமதிக்க மாட்டோம். எக்காரணத்தைக் கொண்டும் அந்த கப்பலிலுள்ள பசளை பரிசோதனைக்குட்படுத்தப்படவும் மாட்டாது. அதற்குரிய கட்டணமும் செலுத்தப்பட மாட்டாது."

-இவ்வாறு கமத்தொழில் அமைச்ச மஹிந்தானந்த அளுத்கமகே கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அந்தக் கப்பலை மீண்டும் அந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அதன் பின்னரே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, மேற்படி பசளைக்கான கட்டணம் செலுத்தப்படாத பட்சத்தில் இலங்கையின் அரச வங்கியொன்றை சீனாவில் சிவப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமென சீன நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பதிவாளர்களின் கொடுப்பனவை அதிகரிக்க பிரதமர் ஆலோசனை

கொழும்பு, ஒக். 28

பதிவாளர்களுக்கு பிறப்பு, இறப்பு பதிவின்போது தற்போது கிடைக்கும் 75 ரூபாய் கொடுப்பனவை 150 ரூபாயாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடளாவிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் சங்கத்தின் உறுப்பினர்களுடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அலுவலக எழுதுபொருள்கள் கொடுப்பனவை 500 மேலும் ரூபாய் முதல் 750 ரூபாய் வரையும் உயர்த்துவதற்கும், சேவை நிறைவின்போது 50,000 ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரையான பணிக்கொடை கொடுப்பனவை வழங்குவது தொடர்பில் 2022 வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழிவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் இதன்போது அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

மேலும் பதிவாளர் பதவியை வழங்கும்போது நீதியமைச்சுடன் கலந்துரையாடி அவர்களுக்கு சமாதான நீதவான் பதவியையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் வலியுறுத்தினார். (அ)

# சிங்கள குடியேற்றத்தை கண்டித்து நாளை வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஒக். 28

வவுனியாவில் சிங்கள குடியேற்றத்தைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பழைய பஸ் நிலையம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதவாச்சியில் இருந்து 1330 சிங்கள குடும்பங்களை வவுனியா வடக்குடன் இணைப்பதன் மூலம் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படும் அரசின் இரகசிய நகர்வை எதிர்த்தே தமிழ் தேசிய மக்கள் முண்னணியினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

### டொலர் இன்மையால்

# உயர்கின்றது சீனி விலை!



கொழும்பு, ஒக். 28

இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் நாட்டில் போதியளவு டொலர் இல்லாத காரணத்தினால் சீனி இறக்குமதியை மேற்கொள்ள முடியாதுள்ளதாக சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் பின்னணியில் சந்தையில் சில தினங்களுக்கு முன்பு சீனி பற்றாக்குறை ஏற்பட்டதோடு, தற்போது சீனியின் விலை 200 ரூபாய் வரையில் பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும், நாட்டுக்கு தேவையான சீனியை இறக்குமதி செய்வதற்காக சீனி இறக்குமதியாளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

### கல்வி TV CHANNEL-1

**28.10.2021**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2

**28.10.2021**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
28.10.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

## ஞானசார தேரரின் பிரவேசம்

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராக சர்ச்சைக்குரிய, கலகொடை அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். ஞானசார தேரர், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு பின்னர் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டவர். சர்ச்சைக்குரிய பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான ஞானசார தேரர், முஸ்லிம்கள் தொடர்பில் கடுமையான எதிர் நிலைப்பாடுள்ளவர். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அவரின் செயல்பாடுகள் கடும் சர்ச்சைக்குரியதாக இருந்தது. ரொஹிங்கிய முஸ்லிம்களை படுகொலை செய்த சர்ச்சைக்குரிய அமைப்பான 999இன், தலைவரான பௌத்த பிக்கு விராதுவை கொழும்புக்கு அழைத்திருந்தார்.

சிறிது காலம் சற்று அமைதியடைந்த ஞனசார தேரர், அண்மைக்காலமாக மீளவும் செயல்பட தொடங்கியிருந்தார். ஈஸ்டர் தாக்குதல் போன்று மேலும் தாக்குதல்கள் நடக்கலாம் என்றும், இவை அனைத்துக்கும் முஸ்லிம்களின் கடவுளான அல்லாஹ்தான் காரணமென்றும் கூறி சர்சைகளை ஏற்படுத்தியிருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், அவர் சற்றும் எதிர்பாராத வகையில், நாட்டின் சட்டம் ஒழுங்கு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அரசாங்கம் எதை நோக்கி பயணிக்கின்றது? மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களை பாதுகாப்பது தொடர்பான சர்வதேச அழுத்தங்கள் இருக்கின்ற சூழலில், அரசாங்கம் சர்ச்சைக்குரிய ஒருவரை சட்டம் ஒழுங்கு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமித்திருக்கின்றமையை என்னவென்பது? அவ்வாறாயின் அரசாங்கம் எந்தவொரு சர்வதேச நியமங்களையும் கருத்தில் கொள்ளவில்லையா அல்லது, அண்மைக்காலமாக அரசாங்கத்திற்குள் இடம்பெற்றுவரும் நெருக்கடிகளை சமாளிக்க முடியாமல் கடும்போக்குவாத சிங்கள – பௌத்த தேசியவாதத்திடம் மேலும் சரணாகதியடைகின்றதா? இது தொடர்பில் ஏற்கனவே 'ஈழநாடு' குறிப்பிட்டிருந்தது. நெருக்கடிகளை கையாளமுடியாமல் போகும்போது, அரசாங்கம் கடும்போக்குவாதிகளை நோக்கி செல்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் 'ஈழநாடு' ஆராய்ந்திருந்தது. எமது கணிப்பு சரியென்பதையே தற்போதைய நிலைமைகள் காண்பிக்கின்றன.

அரசாங்கத்தின் வெற்றிக்கு பெரியளவில் பங்களித்த முருத்தெட்டுவே ஆனந்த தேரர், ஓமல்பே சோபித தேரர் போன்ற முக்கியமான பௌத்த பிக்குகள் – ஜனாதிபதியின்மீதும் அரசாங்கத்தின்மீதும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டிவரும் என்றும் முருத்தெட்டுவே தேரர் அண்மையில் எச்சரித்திருந்தார். அதேவேளை கெரவலப்பிட்டிமின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு வழங்கும் விடயத்திலும் பங்காளிகளுக்கும் ராஜபக்ஷ தரப்புக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. இதற்கிடையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக அறிவித்திருக்கின்றது. இந்த பின்னணியில்தான் ஜனாதிபதி செயலணி ஒன்றின் தலைவராக ஞானசார தேரர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இதில் பிறிதொரு விடயமும் உண்டு. அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அறிவித்திருந்தார். இந்த நிலையில்தான் ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான செயலணியின் தலைவராக ஞானசார தேரரின் நியமனம் இடம்பெற்றுள்ளது. இந்த செயலணியில் முஸ்லிம் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றபோதும், தமிழர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. இந்த செயலணி வழங்கும் பரிந்துரைகளுக்கு அமைவாகவே ஒரே நாடு ஒரே சட்டம் என்னும் விடயம் கையாளப்படவுள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விசித்திரம் என்பதா – தந்திரம் என்பதா? பதிலுக்கு காத்திருப்பதை தவிர வேறு வழிகள் இல்லை. ஆனால், அரசாங்கம் தடுமாறிப் போயிருக்கின்றது என்பது மட்டும் வெள்ளிடைமலை.

# தரையிலிருந்து கடலுக்கு தாவும் ஆர்ப்பாட்டங்கள்!

- அலசுவது இராஜதந்திரி -

ஆர்ப்பாட்டங்கள் யாழ். குடாநாட்டுக்கு புதிதானவையல்ல. அரசியல் சமாச்சாரங்களுக்காக இடையறாது ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றமை வழக்கமாக இருந்ததோடு , மாணவர்களின் பிரச்னைகள் மற்றும் பலதரப்பட்ட சர்ச்சைக்குரிய விடயங்களையும் முன்வைத்து வடபகுதியில் ஆர்ப்பாட்டங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றமை வழக்கமாகும்.

அண்மைக்காலங்களில் இந்திய மீனவர்கள் வடகடலுக்குள் ஊடுருவுவது தொடர்பாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன. ஓரிரு வாரங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் இந்திய மீனவர்களின் ஊடுருவல்களுக்கு எதிராக படகுகள் மூலமாக கடலில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றுக்கு தலைமை தாங்கியிருந்தார்.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் உள்ளூரிலும் இழுவை மடி மீன்பிடித்தலை தவிர்க்க வேண்டுமென குறிப்பிட்டது தொடர்பாக குருநகர் மற்றும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மீனவர்கள் அவருக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருந்தனர்.

மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக ஒரு ஜீவமரணப் போராட்டத்தையே வடபகுதி மீனவர்கள் நடத்தியிருந்தனர். வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க யுத்த கெடுபிடிகள் காரணமாக பல வடபகுதி மீனவர்கள் கடலில் உயிரிழந்தனர்.

யுத்தம் வலுவடைந்த காலகட்டத்தில் வடபகுதி கரையோரங்களில் வாழ்ந்த மீனவர்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறும் சூழ்நிலைகளுக்கும் உள்ளாகியிருந்தனர். வடபகுதி கடல் பிரதேசம் யுத்த கெடுபிடிகளுக்கு உள்ளாகியிருந்த தருணத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை வடபகுதி கடல்பரப்புக்குள் ஊடுருவும் சந்தர்ப்பங்களும் அதிகரித்தே இருந்தன. இதுதவிர, தென்னிலங்கையை சேர்ந்த மீனவர்களும் வடபகுதி கடலுக்குள் மீன்பிடித்தலை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால், இன்று யுத்தம் ஓய்ந்த நிலையிலும் இந்திய மீனவர்கள் வடகடலுக்குள் ஊடுருவுவது இடையறாது நடந்து வருகின்றது. அண்மையில் வடபகுதிக் கடலுக்குள் இலங்கை கற்படை படகுகள் சுற்றி வளைத்தபோது இந்திய படகிலிருந்த மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்திய மீனவப் படகுகள் இழுவைமடி மீன்பிடித்தலில் ஈடுபடுவதால் வடபகுதி கடல் வளம் பெரிதும் பாதிக்கப்படுவதை இலங்கை கடற்படையினரும், சமுத்திர நிபுணர்களும் குறிப்பிட்டு வருவதை அவதானிக்க முடியும்.



இழுவைமடி மீன்பிடித்தலில் நவீன வசதிகளைக்கொண்ட இந்திய ட்றோலர் படகுகள் ஊடுருவுவதனால் அவை கடல் அடிமட்டத்தையும் உழுதுசென்று பாதிப்புகளை ஏற்படுத்தி கடல்வாழ் உயிரினங்களை மட்டுமல்ல. கடல்வாழ் தாவரங்களையும் அழித்துவிடுவதையே அறிய முடிகின்றது.

இந்திய ட்றோலர் மீன்பிடிப் படகுகளைப் பொறுத்தவரை அதிகமானளவில் அவை வடபகுதிக்குள் பிரவேசிப்பதனால் வடபகுதி கடல் சுற்றாடலுக்குக்கூட அதிகளவு பாதிப்பு ஏற்படுவதாகவே இருக்கின்றது.

இந்திய ட்ரோலர் படகுகள் மட்டுமல்ல. வடபகுதி மீன்பிடி படகுகள்கூட இழுவைமடி மீன்பிடித்தலில் ஈடுபடுவதை சுட்டிக்காட்டியதையடுத்தே பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்மீது வடபகுதி மீனவர்கள் நேற்று முன்தினம் குருநகரில் தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தனர்.

மீன்பிடித்தல் என்பது மனித நாகரிகத்துடன் பின்னிப்பிணைந்ததாகும். இலங்கை ஒரு தீவு நாடாகும். குறிப்பாக வடபகுதி மீனவர்கள் வரலாற்று ரீதியாகவே மீன்பிடித்து வருகின்றனர். அத்துடன், இந்திய மீனவர்களும் வரலாற்று ரீதியாக தமது கடல் பிராந்தியங்களில் மீன்பிடித்து வருகின்றனர். ஆயினும், தற்போது மீன்பிடித்தல் நவீன மயப்படுத்தப்பட்டு பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு பதிலாக ட்றோலர் படகுகள் போன்ற நவீன படகுகள் பயன்பாட்டுக்கு வந்ததன் காரணமாகவே கடல்வளம் முழு அளவில் சூறையாடப்படும் நிலவரங்கள் தோன்றியுள்ளன.

இதுதவிர, இந்தியாவில் மீன்பிடித்தலுக்கென கம்பெனிகளும் இருக்கின்றன. இந் நிலையில் இந்திய மீனவர்கள் எல்லை மீறும் நடவடிக்கைகளும் அதிகரித்தே இருக்கின்றன.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான சரச்சை மனிதாபிமான அடிப்படையில் அணுகப்படவேண்டும். ஏனெனில், இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் வெடித்தபோது அகதிகளாக வடபகுதி மக்கள் பல்லாயிரக்கணக்கில் இராமேஸ்வரம், தனுஷ்கோடி போன்ற தமிழகத்தின் கரையோர பிரதேசங்களை சென்றடைந்த போது அவர்களுக்கு அடைக்கலம் வழங்கி - பாதுகாப்புக் கொடுத்தது தமிழக கரையோர பகுதிகளைச்சேர்ந்த மக்களே என்பதையும் நன்றியறிதலோடு நினைவில் கொள்ளவேண்டும்.

எனவே, உணர்வுபூர்வமாக காணப்படும் இப்பிரச்னையை மிக அவதானத்துடனும் வடக்கு - கிழக்கின் எதிர்கால சந்ததியினரின் நலன் கருதியும் அணுகப்படவேண்டியதே அவசியமானதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

வயிறு சம்பந்தமான பிரச்னை அனைத்தும் சரியாகும். குதூகலம் கூடும். அரசு சம்பந்தபட்ட வெற்றி கிடைக்கும். பெரிய முதலீட்டைத் தவிர்க்கவும். வழக்கு வெற்றியை நோக்கிச் செல்லும்.

**இடபம்**

கடந்த சில நாட்களாக இருந்து வந்த பணிச்சுமை குறையும்.நண்பர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். அக்கம்பக்கத்தினரால் இருந்து வந்த தொல்லை தீரும்.

**மிதுனம்**

கடுமையான முயற்சி காரணமாக வெற்றி காண்பீர்கள். புதிய விஷயத்தில் ஆர்வம் ஏற்பட்டு அதை கற்றுக் கொள்வீர்கள். உடல்நலத்தில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரிவடையும்.

**கடகம்**

பிரச்னைகள் ஏற்படாதபடி வார்த்தைகளை கவனமாக பயன்படுத்தவும். பூர்வீக சொத்து தொடர்பான பிரச்னைகள் முடிவடையும். பணியிடமாற்றம் பற்றிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்

**சிம்மம்**

வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகி இலாபம் கிடைக்கும். திட்டமிட்ட பயணம் தள்ளிப்போவதால் நன்மை விளையும். அரசு ஊழியர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும்.

**கன்னி**

நீண்டகால தடை விலகி நல்ல பணிக்கு வாய்ப்புக் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகள் செய்ய இன்று உகந்த நாள். பல காலம் தட்டிப்போன சுபநிகழ்ச்சிகள் கைகூடும்

**துலாம்**

பணியிடத்தில் உங்களால் கலகலப்பான சூழல் உருவாகும். எதிர்பாலினத்தவரின் நட்பால் நன்மை அடைவீர்கள். நவீன மின்சார சாதனம் ஒன்றை வாங்குவீர்கள்.

**விருட்சிகம்**

பொழுது போக்குகளில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினரை அனுசரித்து செல்ல வேண்டியிருக்கும். அலுவலகத்தில் ஏற்பட்டிருந்த பிரச்னையை தீர்ப்பீர்கள்.

**தனுசு**

மற்றவர்களுடன் விவாதிக்கும்போது எச்சரிக்கை அவசியம். பண விஷயத்தில் ரிஸ்க் எடுக்காதீர்கள். யாரையும் பகைக்க வேண்டாம். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகி மகிழ்ச்சி தரும்.

**மகரம்**

உங்களின் திட்டத்தை செயலாக்குவதற்காக யாரையும் பகைக்க வேண்டாம்.குடும்பத்தினருக்கு நன்மை ஏற்படும். மனதில் அநாவசிய பயம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

**கும்பம்**

நிதிப் பற்றாக்குறை இருந்தாலும் திறம்பட சமாளிப்பீர்கள். சகஊழியர்களுடன் வீண் வம்பு வேண்டாம். உங்களால் சமாளிக்கக்கூடிய அளவு பொருளாதாரப் பிரச்னைகள் வரும்.

**மீனம்**

உடன்பிறந்தவர்களுக்கு நன்மை ஏற்பட வாய்ப்புண்டு. இளைஞர்கள் எதிலும் அலட்சியம் காட்ட வேண்டாம். மகிழ்ச்சி ஏற்படும்படியான சூழல் உருவாகும். உங்களின் கடமையை நிறைவேற்றுவீர்கள்.

# ம.தி.மு.க. போராட பிறந்த ஒரு கட்சி; துரை வைகோவுக்கு துணை நிற்பேன்

## முன்னாள் கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத்



சென்னை, ஒக். 28,

"ம.தி.மு.க. போராட பிறந்த ஒரு கட்சியாகும். போராட்டக்களத்தில் கட்சியின் தலைமை நிலைய செயலாளர் பதவிக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள துரை வைகோவிற்கு நான் துணை நிற்பேன்" என ம.தி.மு.கவின் முன்னாள் கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத் அறிவித்துள்ளார்.

ம.தி.மு.க.வில் பொதுச்செயலாளர் வைகோவின் மகன் துரை வையாபுரிக்கு தலைமை நிலைய செயலாளர் என்று பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் துரை வையாபுரிக்கு பொறுப்பு அளிக்கப்பட்டது குறித்து நாஞ்சில் சம்பத் கூறுகையில்,

"தலைமை கழக செயலாளராக பொறுப்பேற்றுள்ள துரை வைகோவுக்கு எனது வாழ்த்துக்கள். அதற்கு தகுதியானவர் அவர், தலைமை கழகத்தை தொடர்ந்து இயக்குகின்ற ஆற்றல் துரை வைகோவுக்கு உள்ளது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் நேற்றைவிட இன்று, இன்றை விட நாளை என வேகமாக இயங்குவதற்கு இந்த நியமனம் உதவும். வைகோ களைத்திருக்கிறார், கட்சி இளைத்திருக்கிறது. இந்த இரண்டையும்போக்க துரை வைகோ வந்திருக்கிறார். இதனால் தமிழகத்தில் ம.தி.மு.க. தற்போது பேசும்பொருளாக மாறியுள்ளது. அப்படிஎன்றால் அவரின் நியமனம் சரியானது என்று கூறியுள்ளார்.

மேலும், அரசியல் என்பது வேறு, வரலாற்று அரசியல் என்பது வேறு. ம.தி.மு.க. அதிகாரத்திற்கு வரும் கட்சி அல்ல. போராட பிறந்த கட்சியாகும். போராட்டக்களத்தில் துரை வைகோவிற்கு நான் துணை நிற்பேன். துரை வைகோவிற்கு உதவிகரமாக இருக்க திட்டமிட்டு உள்ளேன். ஆனால், கட்சியில் சேரும் எண்ணம் இல்லை. திராவிட இயக்கத்தின் செயல்பாட்டாளராக தொடர்ந்து செயல்படுவேன்" என்று தெரிவித்தார்.

தி.மு.க.வில் கொள்கை பரப்பு செயலாளராக இருந்த நாஞ்சில் சம்பத், கட்சி தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ம.தி.மு.க. வில் இருந்து விலகி அ.தி.மு.க.வில் இணைந்தார். ஜெயலலிதா மறைவுக்கு பின் சசிகலா, தினகரனை ஆதரித்த இவர், தற்போது அரசியலில் இருந்து விலகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# சசிகலா குறித்து பன்னீர்ச்சொல்வம் சொன்னது சரியான கருத்துத்தான்!

## ஆதரவு தெரிவிக்கிறார் டி.டி.வி.தினகரன்



தஞ்சாவூர், ஒக். 28,

சசிகலாவை மீண்டும் அ.தி.மு.க.வில் இணைத்துக்கொள்ளுவது தொடர்பில் எப்போதும் நிதானமாக பேசும் ஓ பன்னீர்செல்வம், சரியான கருத்தையே கூறியிருக்கிறார் என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

சசிகலாவை மீண்டும் அ.தி.மு.கவில் சேர்ப்பது குறித்து தலைமைக் கழக நிர்வாகிகள் ஆலோசித்து முடிவு செய்வார்கள் என்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கூறியிருந்தார்.

இந்த நிலையில், செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், ஓ.பன்னீர்செல்வம் சரியான கருத்தையே கூறியிருக்கிறார். என்றார்.

இது குறித்து டி.டி.வி. தினகரன் மேலும் கூறுகையில், "எப்போதும் நிதானமாக பேசும் ஓ பன்னீர்செல்வம், சரியான கருத்தையே கூறியிருக்கிறார்" என்றார்.

பன்னீர்ச்செல்வத்தின் கருத்து எடப்பாடி தரப்பில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலைமையில் தினகரனின் இந்தக் கருத்து மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஷாருக்கான் மகனை போதை வழக்கில் இலக்கு வைப்பதன் நோக்கம் என்ன?

## கேள்வி எழுப்புகின்றார் சீமான்

சென்னை, ஒக். 28,

இஸ்லாமியர் என்பதற்காக ஷாருக்கானின் மகன் ஆரியன் கானைக் குறிவைப்பதா? என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இது குறித்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

"நடிகர் ஷாருக்கானின் மகனான ஆர்யன் கானை போதைப் பொருள் பயன்படுத்தினார் என கைது செய்த வழக்கில் அதிகார அத்துமீறலும், அரசியல் பழி வாங்கல் நடவடிக்கைகளும் நடந்தேறி வருவது நாடெங்கிலும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்டவர் ஓர் இஸ்லாமியர் என்பதாலேயே, அவரை குறிவைத்து அரசதிகாரம் காய்களை நகர்த்தி வருவது கடும் கண்டனத்திற்குரியது.

ஆர்யன் கானை பிணையில் விடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு, போதை விருந்து நடந்ததாக சொல்லப்படும் சொகுசு கப்பல் நிர்வாகத்தின் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பது குறித்து எதுவும் தெரியவில்லை.

தவிர்க்க இயலா பல்வேறு சந்தேகங்களும், விடைதெரியா கேள்விகளும் எழும் நிலையில், ஷாருக்கானின் மகன் என்பதாலேயே, இவ்வழக்கில் ஆர்யன் கான் சிக்க வைக்கப்பட்டுள்ளார்



எனும் வாதத்தில் உண்மையில்லாமல் இல்லை. பா.ஜ.க. அரசின் இக்கொடுங்கோல் செயல்பாடுகளுக்கு வன்மையான எதிர்ப்பை பதிவு செய்கிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எந்தவித மத அடையாளங்களையும் ஆரியகுளத்தில் அமைக்க முடியாது

## யாழ். மாநகர சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 28

**யாழ்.மாநகர சபையின் சொத்தாக இருக்கும் ஆரியகுளத்தில் எந்தவிதமான மத அடையாளங்களையும் அமைக்க முடியாது என யாழ்.மாநகர சபையில் தீர் மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமை யில் இடம்பெற்றது.

இதன்போதே இவ்வாறு தீர் மானம் நிறைவேற்றப்பட்டு அந்த தீர்மானத்தை நாக விகா ரையின் விகாராதிபதிக்கு அனுப்பி வைப்பது என்றும் அமர்வின்போது தீர்மானிக் கப்பட்டது. (அ-03)

# ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில்

# பூஜித்-ஹேமசிறிக்கு எதிரான வழக்கை கைவிட உத்தரவு!

கொழும்பு, ஒக். 28

ஏப்ரல் 21 தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர் பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செய லாளர் ஹேமசிறி பெர் னாண்டோ ஆகியோருக்கு எதிராகத் வழக்கு தாக்கல் செய்யப்பட்டி ருந்த நிலையில் அந்த வழக் கைக் கைவிடுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதி மன்றில் இந்த வழக்கு விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விசேட நீதிமன்றில் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான வழக்கு தாக்கல் செய்யப்பட் டுள்ளதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான் பௌத்தத்துக்கு எதிரானவன் அல்லன்

## கூறுகிறார் யாழ்.மாநகர முதல்வர்



யாழ்ப்பாணம், ஒக். 28

நான் பௌத்த மதத்துக்கு எதிரானவன் அல்லன். நான் ஒரு மதவாதியும் அல்லன் என யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை யில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

நேற்று இடம்பெற்ற யாழ். மாநகர சபை அமர்வில் நாக விகாரையின் விகாராதிபதி ஆரியகுளத்தின் புனரமைப்புப் பணிகளை நிறுத்துமாறு கோரி மாநகர முதல்வருக்கு அனுப் பிய கடிதம் தொடர்பில் சபை யில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நான் ஒரு மதவாதி அல்லன். அத்தோடு பௌத்த மதத்துக்கு எதிரானவனும் அல்லன். நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன். ஆனால் ஏனைய மதங்களுக்கு எதிரானவன் அல்லன். என்னை மதவாதி என சித்தரிக்கும் வகை யில் நாகவிகாரை விகாராதிபதி யினால் யாழ்.மாநகர முதல்வர் என எந்தவித மரியாதையும் வழங்காமல் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

என்னைப் பற்றிய தவறான புரிதலுடன் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்கள். அப்பகுதி புனித பிரதேசமாக இருக்கவேண்டும். நான் இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு தமிழன். அந்த வகையில் ஒரு மதச் சார்பற்ற இடமாக-அனைத்து மத மக்களும் தாம் விரும்பிய மதத்தை வழிபடும் அல்லது தங்கள் மத அனுஷ் டானங்களில் ஈடுபடும் இட மாக தமிழ்த்தேசம் கட்டி அமைக்கப்படும் - என்றார்.

இதேவேளை, யாழ். நகர மத்தியில் அமைந்துள்ள ஆரிய குளத்தில் சிவபெருமானின் சிலை ஒன்றை பிரதிஷ்டை செய்து வைக்குமாறு யாழ். மாநகரசபை உறுப்பினர் நித்தி யானந்தன் மாநகரசபை அமர் வின்போது பிரேரித்தார்.

நாக விஹாரையின் விஹார திபதி அந்த இடத்தை பௌத்த மயமாக்கும் முயற்சியில் ஈடுபடு கின்றார். அதனைத் தடுப்பதற் காக ஆரியகுளப் பகுதியில் சிவ பெருமானின் சிலையை பிர திஷ்டை செய்யுமாறு அவர் கோரினார்.

இதற்கு பதில் உரையாற்றிய முதல்வர் வி.மணிவண்ணன், குறித்த பிரேரணையில் குறிப் பிடப்பட்டுள்ள சிவபெருமா னின் சிலை என்பது இந்துக்க ளின் கடவுள். ஏற்கனவே யாழ்ப்பாண நகரத்தில் மும்மத மக்களும் வாழ்கின்ற நிலையில் ஒரு மதத்தை மட்டும் நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது நல்லதொரு விடயம் அல்ல. அனைத்து மத மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகை யில் அந்த இடத்தை புனித பிரதேசமாக - தூய்மையாக பேணுவதற்கான நடவடிக் கையே முன்னெடுக்கப்படுகின் றது. எனவே சிவபெருமானின் சிலையை நிறுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்- என்றார். (அ-03)

# மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் பணிப்பாளராக ஷர்மிலா ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 28

தேசிய மிருகக்காட்சிசாலை கள் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய பணிப்பாளர் நாயக மாக ஷர்மிலா ராஜபக்ஷ நிய மிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த நிய மனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று முதல் அவர் கடமை களை பெறுப்பேற்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

# சீன சேதன பசளையை மீண்டும் பரிசோதிக்க வேண்டியதில்லை

## புத்தி மாரம்பே சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 28

ஏற்கனவே இரண்டு முறை நிராகரிக்கப்பட்ட, சீனாவிலி ருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ள உரத்தை மீண்டுமொருமுறை பரிசோத னைக்கு உட்படுத்த அவசிய மில்லையெனப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ச் செய்கை விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், அது பொருத்த மான நடவடிக்கை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீன நிறுவனத்தின் சேதனப் பசளையை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறு வனமொன்றுக்கு அனுப்பி, அத னைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு இணங்குவ தாக விவசாயத்துறை இரா ஜாங்க அமைச்சர் சஷீந்ர ராஜ பக்ஷ கொழும்பில் ஊடகங்களி டம் கருத்து தெரிவித்தபோது குறிப்பிட்டார். (அ)

# சிரேஷ்ட தமிழ் அதிகாரிகள் இருவருக்கு ஆணைக்குழுக்களில் உறுப்பினர் பதவி

கொழும்பு, ஒக். 28

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாக ராஜா, தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸை நியமிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவி னால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு பாராளு மன்றப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

மாவட்ட செயலாளர், சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அமைச்சின் செயலா ளர் என உயர் பதவிகளை வகித்த திருமதி பி.எஸ். எம் சார்ள்ஸ், 2020ஆம் ஆண்டு ஜனவரியில் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

அவர் கடந்த மாதம் ஆளுநர் பதவியிலிருந்து விலகிய நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு வின் உறுப்பினராக நியமிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பரிந்துரைத்தார்.

அதற்கு சபாநாயகர் தலைமை யிலான பாராளு மன்ற பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, சிரேஷ்ட நிர்வாக அதிகாரி யான வி. திரு.சிவஞானசோதியின் மறைவால் பொதுச் சேவை ஆணைக்குழு வின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சிரேஷ்ட அதிகாரி சுந்தரம் அருமைநாயகத்தை நியமிக்கு மாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் முன்வைக்கப் பட்ட யோசனைக்கும் பாராளுமன்றப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

# குற்றவாளி தலைமையில் செயலணியா? நகைச்சுவை என்கிறார் சாணக்கியன்!

மட்டக்களப்பு, ஒக். 28

பொதுபல சேனா இயக்கத் தின் பொதுச் செயலாளர் கல கொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற தலைப்பில்13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டுள் ளமை நகைச்சுவையானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழு வொன்றை வழிநடத்த ஒரு குற்றவாளியை நியமிப்பதா? எனவும் அவர் கேள்வி எழுப்பி யுள்ளார்.

இந்தக் குழுவே முரண்ப டாக உள்ளது. தற்போதுள்ள சட்டத்தை சரியாக செயல் படுத்த முடியாமல் ஒரு குழுவை அமைப்பதன் நோக்கம் என்ன? எனவும் சாணக்கியன் கேட்டுள் ளார்.

இதேவேளை, சிறுபான்மை மக்களுக்கு எதிரான பல்வேறு வன்முறை சம்பவங்கள் ஏற்படு வதற்கு பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செய லாளர் கலகொடஅத்தே ஞான சார தேரர் காரணமாக இருந் துள்ளார் என பல குற்றச்சாட் டுக்கள் உள்ளன.

கலகொட அத்தே ஞானசார தேரரின் வழிகாட்டலின் கீழ், இலங்கையிலுள்ள பல முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றம் சுமத் தப்பட்டது.

அத்துடன், சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு செயற்பாடுகளை கண்டித்து, கலகொடஅத்தே ஞானசார தேரர் கடந்த காலங்களில் பெரிய போராட்டங்களையும் நடத்தியிருந்தார்.

சிறுபான்மை சமூகத்துக்கு எதிராக வன்முறைகளை கட்ட விழ்த்து விடும் செயற்பாடு களை கலகொட அத்தே ஞான சார தேரர் ஈடுபட்டு வருவதாக கடந்த காலங்களில் முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட்ட போதிலும் அவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஹோமாகம நீதிமன்றத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக் னெலிகொட காணாமல் ஆக் கப்பட்ட சம்பவம் தொடர் பான வழக்கு விசாரணைகள் நிறைவடைந்தன் பின்னர் அமைதியின்மையை தோற்று விக்க முயற்சித்த குற்றச்சாட் டில் கலகொடஅத்தே ஞான சார தேரருக்கு நீதிமன்றால் 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் அவர் விடு விக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.

# தேர்தல் விதிமுறைகளை சட்டபூர்வமாக்க ஏற்பாடு

கொழும்பு, ஒக். 28

தேர்தல் விதிமுறைகளை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் காலங்களில் விதிமுறைகள் வர்த்தமானி ஊடாக வெளியிடப்படுவதா கவும் அவற்றை மீறுபவர்க ளுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடிய வில்லை எனவும் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு விதிமுறைகளை மீறுவதை குற்றமாகக் கருத் திற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தேர்தல் விதிமுறை களை சட்டப்பூர்வமாக்க தீர்மானிக்கப்பட்டதாக அந்த ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ)

# கொரோனாவிலிருந்து இலங்கை இன்னும் முற்றாக விடுபடவில்லை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஒக். 28**

**கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து இலங்கை இன்னும் விடுபடவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அந்த சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கையில்-

சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால் ஏற்படும் பின்விளைவுகளை எதிர்வரும் நாள்களில் அனுபவிக்க நேரிடும்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 200 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

தடுப்பூசிகள் மூலம் உருவாக்கப்படும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வருகிறது. குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு. நிலைமையை எதிர்கொள்ள பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

சமூக இடைவெளி, கை சுத்திகரிப்பு மற்றும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களை பொது மக்கள் குறைந்தது இன்னும் ஒரு வருடமாவது கடைபிடிக்க வேண்டும்.

கோவிட்-19 தொற்று நோயைக் கையாளும்போது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை தொடர்ந்து மூடுவது ஒரு தீர்வாகாது. சில நடவடிக்கைகளை தடுப்பூசி உந்துதலுடன் மீண்டும் தொடங்கலாம். இருப்பினும் சுகாதார வழிகாட்டுதல்களை புறக்கணித்தால் சிக்கல்கள் ஏற்படும் - என்றார்.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 1000 கிலோ மஞ்சளுடன் இருவர் கைது


கொழும்பு, ஒக். 28

கற்பிட்டி, ஹிப்பன்தீவை அண்மித்த பகுதியில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக - கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்ட 1000 கிலோ மஞ்சளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதுடன் 03 மீன்படிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை கடந்த திங்கள் இரவு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் இரவு சந்தேகத்துக்கிடமான டிங்கிப் படகு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போது குறித்த படகிலிருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்ட 160 கிலோ மஞ்சளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

அதன் பின்னர், ஹிப்பன்தீவு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 1000 கிலோ நிறையுடைய உலர் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

பேசாலை பிரதேசத்தைச் சேர்ந்த 26 மற்றும் 34 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.



# இந்திய மீனவர்கள் இருவரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 28

வடக்கு கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது படகு விபத்துக்குள்ளாகிய நிலையில் கைதான இந்திய மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் குடாநாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ய முற்பட்டபோது அவர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் கடலில் வீழ்ந்த மீனவர்களில் இருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டபோதிலும் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார்.

மீட்கப்பட்ட மீனவர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்றிருந்த நிலையில் அவர்களை விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் சில நாள்களில் குறித்த மீனவர்கள் இருவரும் தாயகம் திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-3)

# கொரோனா சூழல் காரணமாக ரூ. 2700 கோடி மதுவரி இழப்பு

கொழும்பு, ஒக். 28

நாட்டில் நிலவும் கொரோனா சூழல் காரணமாக இந்த வருடத்தில் அரசாங்கம் 2700 கோடி ரூபாய் மதுவரி வருவாயை இழந்திருப்பதாக மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரிவித்தார்.

மதுவரித் திணைக்களத்தினால் இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 160 பில்லியன் ரூபாயாக இருக்கின்றபோதும், இந்த இலக்கை எட்டுவது சிரமமாக இருக்கும் என்றும் பணிப்பாளர் நாயகம் குழு முன்னிலையில் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் மதுப் போத்தல்கள் மற்றும் மதுப் போத்தலுடன் தொடர்புபட்ட உற்பத்திகளுக்கு பாதுகாப்பான ஸ்ரிக்கர்களை வழங்குவது மற்றும் பாதுகாப்பான ஸ்ரிக்கர் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் காலதமாதமடைவது குறித்தும் இங்கு கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

மதுவரித் திணைக்களம் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019ஆம் ஆண்டுக்கான அறிக்கை மற்றும் அத்திணைக்களத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்ந்து பார்க்கும் நோக்கில் கடந்த 22ஆம் திகதி கோபா குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அக்குழுக் கூட்டம் இடம்பெற்றிருந்தது. (அ)

# அநுராதபுரத்தில் 20 சிறுவர்களுக்கு கொரோனா

கொழும்பு, ஒக். 28

அநுராதபுரம் நகரில் கடந்த மூன்று தினங்களில் முன்னெடுக்கப்பட்டு அன்ரிஜென் பரிசோதனையில் கொரோனா தொற்றுக்குள்ளான 20 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அநுராதபுரம் மாவட்ட தொற்று நோயியல் விசேட மருத்துவ நிபுணர் ஆர். எம். எஸ்.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்றுக்குள்ளான சிறுவர்கள் 20 பேரும் 12 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் என சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் கடந்த 24ஆம் திகதி கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 16 வரை குறைவடைந்திருந்ததாகவும், அந்த தொகை தற்போது 100 ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவர்களில் அநேகமானவர்கள் அநுராதபுர நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் கூறியுள்ளனர். (அ)

# நவம்பர் 1 முதல் பூஸ்டர்!

கொழும்பு, ஒக். 28

இரண்டு தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூ வழங்கும் பணி நவம்பர் முதலாம் திகதி தொடங்கும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

முன்கள சுகாதார ஊழியர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியாக வழங்கக்கூடிய இரண்டு மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசி டோஸ்கள் சுகாதார அமைச்சின் வசம் இருப்பதாக அமைச்சர் கூறினார்.

பூஸ்டர் தடுப்பூசிகளை நிறைவு செய்வதற்காக மேலும் 14.5 மில்லியன் தடுப்பூசி மருந்துகளுக்கான கட்டளை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், கொரோனா வைரஸ் காரணமாக இலங்கை கல்வித்துறையில் பல பின்னடைவுகளை எதிர்கொண்டுள்ளதாக ஒப்புக் கொண்ட சுகாதார அமைச்சர், இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார். (அ)

# 60 வீதமானவர்களுக்கு முழுமையாக தடுப்பூசி!

கொழும்பு, ஒக். 28

நாட்டில் 60 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டு மக்களுக்கு மூன்றாவது கொவிட் தடுப்பூசி வழங்குவதற்கு தேவையான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (அ)

## இறக்குமதி தடைக்கு மத்தியிலும்

# கொழும்பு துறைமுகத்தில் 400 சொகுசு வாகனங்கள்!

கொழும்பு, ஒக். 28

நாட்டில் வாகன இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோதிலும் கொழும்புத் துறைமுகத்தில் 400இற்கும் அதிகமான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என தெரியவந்துள்ளது.

குறித்த வாகனங்களை அரசாங்கம் பறிமுதல் செய்யுமா என்பது குறித்து இலங்கை சுங்கம் நிதி அமைச்சுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வாகன இறக்குமதிக்கு அரசாங்கம் தடை விதித்ததைத் தொடர்ந்து, குறித்த வாகனங்கள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் இந்த நடவடிக்கையானது சட்டவிரோதமானது எனவும் அந்த கடிதத்தில் இலங்கை சுங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இங்கு சுமார் 300இற்கும் அதிகமான அதி சொகுசு வாகனங்கள் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

குறித்த வாகனங்களில் பெரும்பாலானவை ஜப்பான் மற்றும் பிரித்தானியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# 2022 முதல் மணல் விநியோகம் புதிய முறையின் கீழ் நடக்கும்

கொழும்பு, ஒக். 28

அடுத்த வருடம் முதல் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் கீழ் நாடுமுழுவதும் மணல் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இடைத்தரகர்களால் மணல் அள்ளப்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கம் என சுற்றுச்சூழல் அமைச்சு அறிவித்துள்ளது.

மணல் விநியோகத்தை முறைப்படுத்துவதற்காக மணல் விநியோக உரிமையாளர்கள் மற்றும் டிப்பர் வாகனச் சாரதிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே இந்த தகவல் தெரியவந்துள்ளது.

கட்டுமானப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் கீழ் மணல் விநியோகம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது மானம்பிட்டி மணலுக்கு சந்தையில் அதிக தேவை உள்ளது.

எனினும் சில இடைத்தரகர்கள் மணம்பிட்டி மணலுடன் ஏனைய மணலைக் கலந்து அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

இந்த இடைத்தரகர்களின் சுரண்டலால் மணம்பிட்டியில் இருந்து 4 ஆயிரத்து 830 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கனசதுர மணலின் விலை 6 ஆயிரத்து 550 ரூபாயாக உயர்ந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் இதுவரை வெற்றியடைந்துள்ளதுடன், அடுத்த ஆண்டு முதல் அதனை மேற்கொள்ள முடியும்.

இனிமேல் மணல் அள்ளுவதில் எவருக்கும் முன்னுரிமை வழங்கக்கூடாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார்.

பௌத்தம், இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் போன்ற வழிபாட்டுத் தலங்களில் நிர்மாணங்களுக்கு மட்டுமே இனி மேல் முன்னுரிமை வழங்கப்படும் என சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.



## மாந்தை மேற்கு பிரதேசசபை செயலரை இடம்மாற்ற கோரி நேற்று ஆர்ப்பாட்டம்

மன்னார், ஒக். 28

மன்னார்- மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளரை இடமாற்றக் கோரி மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஆதி அருணாச்சலம் தலைமையில் சபை உறுப்பினர்களால் நேற்று புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளரின் ஆளுமையற்ற செயல்பாட்டாலும் வினைத்திறன் அற்ற முடிவுகளாலும் அபிவிருத்திகள் மற்றும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் பின்நோக்கி காணப்படுவதாகவும் எழுத்து மூல செயற்பாடுகள் மட்டுமே இடம்பெறுவதாகவும் பௌதீக செயற்பாடுகள் எவையும் இடம் பெறுவதில்லை எனவும் தெரிவித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளர் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார் என்றும், குறிப்பாக கொள்வனவுகள், எரிபொருள் விற்பனைகள் என்பவற்றில் ஊழல் மேற்கொண்டுள்ளதாகவும் அதை உறுப்பினர்கள் உறுதிப்படுத்தி வழங்கியதாகவும், ஆனால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

விரைவில் புதியதொரு ஆளுமையுள்ள பிரதேச சபை செயலர் ஒருவரை நியமிக்குமாறும் அவ்வாறு நியமிக்காத பட்சத்தில் இன்னும் பல போராட்டங்களை மேற்கொள்ள தயாராக உள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (அ)

# விகிதாசார தேர்தல் முறைக்கு சுதந்திர கட்சியும் முழு ஆதரவு

### மனோ கணேசனிடம் கூறினார் மைத்திரி



**கொழும்பு, ஒக். 28**

**சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவை தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.**

தேர்தல் முறைமை தொடர்பில், சுதந்திரக் கட்சியின் நிலைபாட்டை அறிவதற்காகவும், அதுபற்றி கலந்துரையாடவுமே மைத்திரிபாலவை தாம் சந்தித்தார் என மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட மனோ கணேசன் கூறியவை வருமாறு:

தேர்தல் நடக்க போகிறதோ, இல்லையோ, ஆனால், தேர்தல் முறைமையை பூரணமாக மாற்றி விகிதாசார முறைமையை ஒழித்து, கலப்பு முறைமையை கொண்டு வந்து, சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவங்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி, இந்நாட்டில் இரண்டு கட்சி ஆட்சியை நிலைபெற செய்ய அரசாங்கம் கங்கணம் கட்டி செயற்படுகிறது.

இதற்கு உறுதுணையாக சுதந்திரக் கட்சியும் கலப்பு முறைமையை ஆதரிக்கிறது என தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவுக்குழுவில் அறிவித்துள்ளார்.

இது ஏற்கனவே சுதந்திரக் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் என்னிடம் நேரடியாக அறிவித்திருந்திருந்த நிலைப்பாட்டுக்கு முரணாக உள்ளது என நான் இச்சந்திப்பின் போது முன்னாள் ஜனாதிபதிக்கு எடுத்து கூறினேன்.

சுதந்திரக் கட்சியே இன்று நாட்டில் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கிறது. இந் நிலையில் உத்தேச கலப்பு தேர்தல் முறை தமிழ், முஸ்லிம் கட்சிகளை மட்டுமல்ல, சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி ஆகிய கட்சிகளையும் அழித்து விடும் என்று மைத்திரிபாலவிடம் நான் எடுத்துக் கூறினேன்.

தற்போது தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து ஜே.வி.பி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளும் விகிதாசார முறைமையையே ஆதரிக்கின்றன. கலப்பு முறைமையை எதிர்க்கின்றன.

கலந்துரையாடலின்போது, எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி சுதந்திரக் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன, தெரிவுக் குழுத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறுவது பிழை. அங்கே எமது கட்சின் நிலைப்பாடு சரிவர கூறப்படவில்லை. விரைவில் நமது கட்சியின் அதிகாரபூர்வக் குழு அங்கே வந்து எமது நிலைப்பாட்டை அறிவிப்போம்.

சுதந்திரக் கட்சி கலப்பு முறைமையை ஏற்றுக்கொள்ளாது. நாம் விகிதாசார முறைமையையே ஆதரிக்கிறோம். உள்ளூராட்சி தேர்தலில் கலப்பு முறைமை இருக்கலாம். ஆனால், மாகாணசபை, பாராளுமன்றம் ஆகியவருக்கு விகிதாசார முறைமையையே சரியானது. இதுவே எங்கள் நிலைப்பாடு எனக் கூறினார் - என்றார். (அ)

# வவுனியாவில் அதிக மழைவீழ்ச்சி

வவுனியா, ஒக். 28

வவுனியாவில் நேற்று பெய்த கடும் மழையுடன் இவ்வருடம் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண்டலவியல் அவதானிப்பாளர் தா.சதானந்தன் தெரிவித்துள்ளார் .

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதியிருந்து நேற்று அதிகாலை 8.30 மணிவரையிலான நிறைவடைந்த காலப் பகுதியில் 1015.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இது மாவட்டத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சியாகவும் இவ்வருடம் பதிவாகியுள்ளது . நேற்று முன்தினம் மட்டும் 46.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது . இடைக்கால பருவபெயர்ச்சி மழை தொடர்ந்து பெய்வதுடன் இடி மின்னல் தாக்கம் இருக்கும். மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்-என்றார்.

## கட்டுநாயக்க விமான நிலையத்தின் பி.சி.ஆர் ஆய்வுகூடம் மீளவும் திறப்பு

கொழும்பு, ஒக். 28

கட்டுநாயக்க விமான நிலையத்துடன் இணைந்த பி.சி.ஆர் மருத்துவ ஆய்வுகூடம் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முதல்தடவையாக நேற்று புதன்கிழமை அதிகாலை 2.15 மணிக்கு கட்டாரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்த பயணிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பி.சி.ஆர் பரிசோதனையொன்றுக்காக 40 அமெரிக்க டொலர் கட்டணம் அறவிடப்படுவதுடன், பரிசோதனை முடிவுகள மூன்று மணித்தியாலங்களுக்குள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதி செயலணியில் இன சமத்துவம் கிடையாது

### கரு ஜயசூரிய குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 28

ஒரே நாடு, ஒரே சட்டம் என் பதற்கான ஜனாதிபதி செயலணியில் சமத்துவம் பேணபடவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஏனைய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, இந்த குழுவின் பன்முகத்தன்மையைப் பேணுவதற்காக மக்கள் கருத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டியதும் அவசியமென அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்கான ஜனாதிபதி செயலணிக்கான வர்த்தமானி அறிக்கைக்கு அமைவாக , நபர்கள் சமமான நிலையில் மதிக்கப்படுகிறார்கள் என்பதை அந்த குழுவே முதலில் உறுதி செய்யவேண்டும்.

ஆனால், இந்தக் குழுவில் சகல இனப் பிரதிநிதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளோ, அல்லது பெண்களோ உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இதன் உள்ளக பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதற்காகப் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்- என்று கூறியுள்ளார். (அ)

# சுகாதார சட்டங்கள் தளர்ந்த பின் மக்களின் செயல்பாடுகள் மோசம்

### அச்சம் வெளியிடுகிறார் அசேல குணவர்த்தன

கொழும்பு, ஒக். 28

நாட்டில் அமுல்படுத்தப்பட்ட சுகாதார சட்டங்களை தளர்த்திய பின்னர் மக்களின் செயல்பாடுகள் வருத்தமளிப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார சட்டதிட்டத்தை தொடர்ந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது, சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாத



நிலை காணப்படுகின்றது. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும், சுகாதார நடைமுறைகளை எப்போதும் பின்பற்ற வேண்டும்.

முகக் கவசம் அணியும் பழக்கத்தை பின்பற்றவேண்டும், மக்கள் ஒன்றுக்கூடுவதனை முடிந்தளவு குறைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் தினசரி 500 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

சுகாதார வழிக்காட்டல்களை பிற்பற்றவில்லை என்றால் மீண்டும் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் செல்ல நேரிடும். அனைவரும் சுற்றுலா பயணம் செல்ல விரும்பினாலும், இன்னும் இரண்டு மாதங்களில் பொறுமையாகவும் பாதுகாப்பாகவும் இருந்தால் பெரும் வெற்றியை அடைய முடியும்- என்றார். (அ)



**விஷமற்ற பசளை கொள்கையை கையாள முயற்சித்து, விவசாயிகள் குரக்கன் சால்வையை தீயிட்டு எரிக்கும்போது, மஹிந்தவும் ராஜபக்ஷ குடும்பத்தினரும் பசளை கொள்கையை நியாயப்படுத்த முயற்சித்து, விவசாயிகளின் அதிருப்திக்கும் கோபத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.**

# ராஜபக்ஷக்களின் குரக்கன் சால்வையும் பசளை விவகாரத்தின் குழப்பங்களும்!

■ உபுல் ஜோசப் பெர்னாண்டோ

மஹிந்த ராஜபக்ஷ பரம்பரையின் முதல் வேர் டி.எம். ராஜபக்ஷ. அவர் மஹிந்தவின் தந்தை டி.ஏ. ராஜபக்ஸவின் சகோதரர். அவர் 1936 ஆம் ஆண்டு அரச சட்டவாக்க சபைக்கு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்டார். அந்த காலத்தில் நடந்த தேர்தல்களில் அரசியல் கட்சிகளின் சின்னங்கள் பயன்படுத்தப்படவில்லை.

ஒரு நிறத்தின் கீழ் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். டி.எம். ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடும் போது நிறம் ஒன்றை வழங்குமாறு கோரினார். லேனாட் டுல்ப்புடன் ஒரு பயணம் என்ற நூலில் இது பற்றி இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி லுப்பியன் போலியர், விக்ரமசூரிய, ஜீ.கே.டப்ளியூ. பெரேரா போன்ற பிரபுக்கள் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். இறுதியாக டி.எம். ராஜபக்ஷ தனது வேட்பு மனுவை, அரசாங்க அதிபர் ஜீ.ஜே. நடேசனிடம் கையளித்தார். வேட்புமனுவை கையளிக்கும் போது எனது நிறம் என்ன என்று அவர் அரசாங்க அதிபரிடம் கேட்டார். டி.எம். ராஜபக்ஷ உனது நிறமா.. என கேட்ட அரசாங்க அதிபர் நடேசன், தனது காலை தூக்கி மேசையில் வைத்து, இது தான் உனது நிறம் எடுத்துக்கொள் எனக் கூறினார்.

இதனடிப்படையிலேயே டி.எம். ராஜபக்ஷவுக்கு குரக்கன் நிறம் கிடைத்தது. அரச அதிபரின் காலணி நிறம் கிடைத்த போதிலும் அதனையும் தனக்கு சாதகமாக பயன்படுத்தும் அளவுக்கு டி.எம். ராஜபக்ஷ தூர நோக்கு கொண்டவராக இருந்தார். நான் பெற்றுக்கொண்டது வறிய சேனை விவசாயிகளின் நிறம். ருகுணுவின் குரக்கன் நிறம் என பெருமிதம் பேசி குரக்கன் சால்வையை தோளில் போட்டுக்கொண்டு டி.எம். ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டார். லேனாட் டுல்ப்புடன் ஒரு பயணம் (104 பக்கம்)

இந்த நூலுக்கு அமைய குரக்கன் சால்வையின் வரலாறு இதுதான்.

டி.எம். ராஜபக்ஷவின் நிறம் எமது விவசாயிகளின் குரக்கன் நிறம், குரக்கன் நிறம் வாழ்க.. என டி.எம். வாக்கு கேட்டு கிராமங்களை சுற்றி வந்த போது விவசாயிகள் இந்த கோஷத்தை எழுப்பியதாக நூலில் கூறப்பட்டுள்ளது.

டி.எம்மின் மரணத்தின் பின்னர் பாராளுமன்றத்திற்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையான டி.ஏ. ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்ட போது அரசியல் கட்சிகளுக்கு சின்னங்கள் இருந்தன. டி.ஏ. ராஜபக்ஷ யானைச் சின்னத்தில் போட்டியிட்டார் நிறம் பச்சை. எனினும் தனது சகோதரர் அம்பாந்தோட்டைக்கு அறிமுகப்படுத்திய குரக்கன் சால்வை அணிந்தே அவர் தேர்தலில் போட்டியிட்டார். இதன் பின்னர் அரசியலுக்கு வந்த டி.எம்.ராஜபக்ஷவின் புதல்வர்களான ஜோர்ஜ் ராஜபக்ஷ, லக்ஷ்மன் ராஜபக்ஷ ஆகியோர் குரக்கன் சால்வையை அணிந்தே தேர்தலில் போட்டியிட்டனர்.



1970 ஆம் ஆண்டு டி.ஏ. ராஜபக்ஷ மரணமடைந்த பின்னர் அரசியலுக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவும் குரக்கன் சால்வையை அணிந்தார். 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பஸில் ராஜபக்ஷவும் குரக்கன் சால்வையை அணிந்தே போட்டியிட்டார். 1977 ஆம் ஆண்டு மஹிந்தவை போன்று பஸிலும் தேர்தலில் தோல்வியடைந்தார். இதன் பின்னர் முல்கிரிகல இடைத்தேர்தலில் போட்டியிட்ட சமல் ராஜபக்ஷவும் குரக்கன் சால்வையை அணிந்தார்.

2004 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்கும் வரை இந்த குரக்கன் சால்வை அம்பாந்தோட்டையில் மாத்திரம் பிரபலமாக இருந்தது. மஹிந்த பிரதமர் பதவிக்கு தெரிவான பின்னர் குரக்கன் சால்வையை அணியும் போது இது என்ன சால்வை என அனைவரும் கேட்க ஆரம்பித்தனர்.

"மஹிந்தவின் தோளில் இருப்பது விவசாயிகளின் நிறம், அதுதான் ராஜபக்ஷவினரின் சின்னம் மற்றும் அடையாளம்" என அன்றைய மஹிந்த ஆதரவாளர்கள் குரக்கன் சால்வையை இப்படியே பிரசாரம் செய்தனர்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மஹிந்த தனது தோளில் இருப்பது விவசாயிகளின் அடையாளம் எனக் கூறினார். இந்த குரக்கன் சால்வையின் மீது ஈர்ப்பு கொண்டே, வட மத்திய, தெற்கு, ஊவா மாகாணங்களில் பரவியிருக்கும் விவசாயிகள் மஹிந்த வெற்றி பெற வாக்களித்தனர்.

விவசாயிகளுக்கு பசளையை வழங்குவது மற்றும் ரணில் அரசாங்கம் இரத்துச் செய்த நெல் விற்பனை சபையை மீண்டும் ஏற்படுத்துவது ஆகிய இரண்டு விடயங்களே அன்று மஹிந்தவின் தேர்தல் கோஷமாக இருந்தது.

மஹிந்த விவசாயிகளை கவரும் வகையில் அப்படி பேசினார்....

கமத்தொழிலை முன்னேற்றி நாட்டை பரக்கிரமபாகு யுகத்தை நோக்கி கொண்டு செல்லப் போவதாக கூறும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் அன்று வயல்களை நிரப்புமாறு கூறினார். விவசாயிகளின் பசளை மானியத்தை இரத்துச் செய்தார். விவசாயத்தை அழித்தார். தேசிய மற்றும் சிறிய விவசாயிகளின் கமத்தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது. நெல் விற்பனை சபையை கடந்த அரசாங்கம் இரும்புக்கு விற்பனை செய்தது. இதனால், விவசாயிகளுக்கு தமது உற்பத்தியை விற்பனை செய்ய இடமில்லை. விவசாயிகளின் நெல்லை விற்பனை செய்ய புதிய நிறுவனம் ஏற்படுத்தப்படும்" என பேசினார்.

விவசாயிகள் மஹிந்தவின் குரக்கன் சால்வை மீது நம்பிக்கை வைத்தனர். மஹிந்த ஜனாதிபதியாக தெரிவானார். மஹிந்த ஜனாதிபதியாக தெரிவான பின்னர், பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு தெரிவான போது மஹிந்தவே பஸிலுக்கு குரக்கன் சால்வையை அணிவித்தார். 2010 ஆம் ஆண்டு நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு தெரிவான போது மஹிந்த அவருக்கும் மஹிந்தவே குரக்கன் சால்வையை அணிவித்தார்.

எனினும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ தேசிய உடையை அணியவில்லை. குரக்கன் சால்வையையும் அணியவில்லை.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று பதவிப் பிரமாணம் செய்யும்போது குரக்கன் சால்வையை அணியுமாறு மஹிந்த மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தினர் கோட்டாபயவிடம் கூறினாலும் அவர் அதனை அணிய மறுத்தார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பாராளுமன்ற அமர்வுகளை ஆரம்பிக்கும் நாளில் குரக்கன் சால்வையை அணியுமாறு மஹிந்த ஆலோசனை வழங்கிய போதும் கோட்டாபய அதனை நிராகரித்தார் என செய்திகள் வெளியாகின. எனினும் கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வந்து தனது ராஜாசன உரையை நிகழ்த்தும் போது, குரக்கன் சால்வை பற்றி இவ்வாறு கூறினார்,

"அன்று ருகுணவின் சிங்கமாக அடையாளப்படுத்தப்பட்டவர் டி.ஏ. ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வந்த முதல் நாளில் இருந்து குரக்கன் நிறமான சால்வையை அணிந்தார். கிருவாபத்துவில் உள்ள விவசாயிகளையே அவர் அந்த சால்வை மூலம் அடையாளப்படுத்தினார். நான் அந்த அடையாளத்தை அணியாவிட்டாலும் எப்போதும், நாட்டின் வறிய மக்களுக்கான குரல் கொடுக்கும் குரக்கன் சால்வையின் ஆழமான அடையாளத்தை பிரதிநிதித்துவம் செய்கிறேன் எனக் கூறினார்.

கோட்டாபய அன்று குரக்கன் சால்வையை அணியாது தனது உரையை நிகழ்த்தும் போது மஹிந்தவும் ராஜபக்ஷ குடும்பத்தினரும் பதற்றமடைந்ததை அறிந்து குரக்கன் சால்வை பற்றி பேசி இருக்கலாம்.

எனினும் தற்போது விஷமற்ற பசளை கொள்கையை கையாள முயற்சித்து, விவசாயிகள் குரக்கன் சால்வையை தீயிட்டு எரிக்கும் போது, மஹிந்தவும் ராஜபக்ஷ குடும்பத்தினரும் பசளை கொள்கையை நியாயப்படுத்த முயற்சித்து, விவசாயிகளின் அதிருப்திக்கும் கோபத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

மஹிந்த குரக்கன் சால்வையின் மூலம் 2005 ஆம் ஆண்டு விவசாய நிலைத்தை கைப்பற்றும் முன்னர், அந்த விவசாய நிலம் ஐக்கிய தேசியக் கட்சியின் தாயகமாக இருந்தது. டி.எஸ். சேனாநாயக்கவின் காலத்தில் இருந்தே விவசாய நிலம், ஐக்கிய தேசியக் கட்சியின் தாயமாக இருந்தது.

2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை அமைத்த ரணில் விக்ரமசிங்க, விவசாயிகளுக்கு டெனிம் காற்சட்டையை அணிவித்து, விவசாயத்திற்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி, விவசாயிகளை முதலாளிகளாக மாற்ற முயன்ற போது, சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் சுற்றி வளைத்து சேறுபூசும் பிரசாரத்தை முன்னெடுத்தன.

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம், விவசாயிகளை நவீனமயப்படுத்த முயற்சித்ததால், ஐக்கிய தேசியக் கட்சி தனது தாயகமான விவசாய நிலத்தை இழந்தது. இந்த நிலையில், விவசாயிகள் மற்றும் விவசாய கலாசாரத்தை பாதுகாப்பதாக கூறி, ராஜபக்ஷவினர் கைப்பற்றிய, விவசாய நிலத்தை, கோட்டாபய தனது நேனோ தொழிற்நுட்பம் மற்றும் விஷமற்ற பசளை மூலம் விவசாயிகளை நவீனமயமாக்க முயன்று இழந்து விடுவாரோ என்பதை சொல்ல தெரியவில்லை.

மொழியாக்கம் - ஸ்டீபன்



# சசிகலாவின் அதிரடி நகர்வுகள் அ.தி.மு.கவுக்குள் புதிய நெருக்கடி

■ ஆ.விஜயானந்த்

அ.தி.மு.கவில் சசிகலாவை சேர்த்துக் கொள்வது தொடர்பாக எழுந்துள்ள இரு வேறு குரல்கள், அ.ம.மு.க வட்டாரத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. “அ.தி.மு.கவில் உள்ள சில அறக்கட்டளைகளில் சசிகலாதான் இன்னமும் பொறுப்பில் இருக்கிறார். அவரை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆரின் உறவுகளும் உறுதியாக உள்ளனர்” என்கின்றனர் அரசி யல் விமர்சகர்கள். என்ன நடக்கிறது அ.தி.மு.கவில்?

ஓ.பன்னீர்செல்வம் மதுரை வந்திருந்தார். அப்போது செய்தியாளர்கள் சசிகலா தொடர்பாக கேள்வியெழுப்பிய போது, “அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். அவர்களை ஏற்றுக் கொள்வது என்பது மக்களின் விருப்பம். அவரை அ.தி.மு.கவில் இணைப்பது தொடர்பாக தலைமைக் கழக நிர்வாகிகள் பேசி முடிவு செய்வார்கள். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் தொடங்கிய இந்த இயக்கம் தொண்டர்களுக்காகவே இன்றளவும் செயல்பட்டு வருகிறது. மேலும், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற அடிப்படையில் கட்சி செயல்பட்டு வருகிறது” என்றார்.

மேலும், “அண்ணா வகுத்துக் கொடுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவைதான் அ.தி.மு.கவின் அடிப்படைக் கொள்கை. அரசியல் இயக்கத்துக்குத் தலைமை தாங்கியிருப்பவர்கள், பிறரை அரசியல் ரீதியாக விமர்சிக்கும்போது கண்ணியமான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். அது தொண்டனாக இருந்தாலும் சரி, தலைவராக இருந்தாலும் சரி” என்றார். இந்த வார்த்தைகள் எடப்பாடி பழனிசாமியை நோக்கிக் கூறப்பட்டவையாக பார்க்கப்படுகின்றன.

சசிகலாவுக்கு ஆதரவாக பன்னீர்செல்வம் பேசிய வார்த்தைகள், அ.தி.மு.கவின் மற்றொரு பிரிவினர் இடையே கடும் கோபத்தை ஏற்படுத்தியது.

“சசிகலாவுக்கு எதிராக தர்மயுத்தம் நடத்தியவர் ஓ.பி.எஸ் என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்” என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் விமர்சித்தார். தொடர்ந்து, அ.தி.மு.க துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமியும், “இதனை சாதிக் கட்சியாக மாற்ற விட மாட்டோம்,” என்றார்.

### சுற்றுப்பயணம் தொடங்கிய சசிகலா

இந்நிலையில், தென் மாவட்டங்களில் அரசியல் சுற்றுப்பயணத்தை சசிகலா மேற்கொண்டுள்ளார். சென்னை தியாகராய நகரில் உள்ள வீட்டில் செவ்வாய்க்கிழமையன்று கிளம்பிய சசிகலாவுடன் இளவரசியும் பயணம் செய்கிறார். நேற்று தஞ்சையில் டி.டி.வி.தினகரன் மகளின் திருமண வரவேற்பில் பங்கேற்ற பிறகு மதுரை சென்று ஆதரவாளர்களை சந்திக்க திட்டமிட்டிருந்தார். பின்னர், திருநெல்வேலி உள்பட சில மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொண்டு அ.தி.மு.க தொண்டர்களை சந்திக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தச் சுற்றுப் பயணத்தை கொங்கு மண்டல அ.தி.மு.க நிர்வாகிகள் உன்னிப்பாக கவனிக்கத் தொடங்கியுள்ளனர்.

“சசிகலாவை அ.தி.மு.கவில் சேர்த்துக் கொள்ளும் முடிவில் ஓ. பன்னீர்செல்வம் இருக்கிறாரா?” என அ.தி.மு.கவின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் பெங்களூர் புகழேந்தியிடம் கேட்டோம் “ஆமாம். சசிகலா வந்தால்தான் கட்சி காப்பாற்றப்படும். இல்லாவிட்டால், தொடர் தோல்விகளால் அ.தி.மு.க அழிந்துவிடும். தவிர, வெறுமனே பேசியதோடு ஓ.பி.எஸ் கடந்து போய்விடக் கூடாது” என்கிறார்.

“மதுரையில் ஓ.பி.எஸ் பேசியதற்குக் காரணமே எடப்பாடிதான்” எனக் குறிப்பிட்ட புகழேந்தி, “சசிகலா குறித்து எடப்பாடி பழனிசாமி பேசிய தரக்குறைவான வார்த்தைகள்தான் பிரச்னைக்குக் காரணம். ஒரு முதலமைச்சராக இருந்தவர், சசிகலாவை தரக்குறைவாக பேசியதை ஓ.பி.எஸ் விரும்பவில்லை. அதனால்தான், “அண்ணா வழியில் வந்த நாம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு எதிராகப் பேசுவது தவறானது” என்றார். அவர் குறிப்பிட்டது எடப்பாடியைத்தான்.

### ஆ.ராசாவுக்கு எதிராக பேசியது சரியா?

“தனது தாயை தி.மு.க எம்.பி ஆ.ராசா தவறாகப் பேசியதாகக் கூறி தேர்தலில் எடப்பாடி பிரசாரம் செய்தார். ஆ.ராசா கூறியதையே மாற்றிப் பேசி வாக்கு சேகரித்தார். சசிகலாவும் பெண்தான். அவரைப் பற்றி மட்டும் எடப்பாடி பழனிசாமி பேசலாமா? தேவர் குருபூஜை முடிந்த பிறகு இந்த விவகாரத்தை ஓ.பி.எஸ் மறந்துவிடக் கூடாது. குருபூஜையில் சசிகலாவை ஓ.பி.எஸ் வரவேற்றுக் கூட் டிச் செல்ல வேண்டும். அங்கு அவரை வைத்தே தங்கக் கவசத்தை அணிய வைக்க வேண்டும் என எதிர்பார்க்கி றோம்” என்கிறார்.

மேலும், “சசிகலாவை சேர்த்தால், இறந்து போய்விடுவேன் என கே.பி.முனுசாமி பேசுகிறார். அவரை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்த வேப்பனஹள்ளி மக்கள் என்ன தவறு செய்தார்கள்? அவர் நல்லபடியாகவே இருக்கட்டும். அ.தி.மு.கவில் நல்ல மாற்றங்கள் வரும். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு சசிகலாதான் பொதுச் செயலாளர் எனக் கூறி கையொப்பமிட்டவர்களில் நானும் ஒருவன். அப்போது போயஸ் தோட்டம் சென்று அவரைக் கூட்டி வந்தபோது கே.பி.முனுசாமி ஏன் அமைதியாக இருந்தார்? ” என்கிறார்.

### சசிகலாவை சேர்க்க விரும்புவது ஏன்?

“இரட்டை இலையை மதுசூதனன், செம்மலை, ஓ.பி.எஸ் ஆகியோர்தான் சட்டப்படி பெற்றனர். இதில், மதுசூதனன் இறந்துவிட்டார். செம்மலையின் நிலைப்பாடு என்னவென்று தெரியவில்லை. ஓ.பி.எஸ்ஸை புறக்கணித்துவிட்டு இரட்டை இலை சின்னத்தை யாரும் வைத்திருக்க முடியாது. தவிர, இரட்டை இலைக்கு சிக்கல் வருவதை கட்சியில் யாரும் விரும்ப மாட்டார்கள். சின்னம் இல்லாமல் போனால் டிராக்டர் சின்னத்தில் நின்று விவசாயி எடப்பாடி ஜெயித்து விடுவாரா? அ.தி.மு.கவுக்கு உள்ள பலம் என்பதே இரட்டை இலை சின்னமும் எம்.ஜி.ஆர் என்ற பெயரும் தான்” என்கிறார், மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்.

தொடர்ந்து பேசுகையில், “சசிகலாவை சேர்த்துக் கொள்ள வேண்டும் என ஓ.பி.எஸ் நினைக்கிறார். காரணம், தென்மாவட்ட தேர்தல் நிலவரத்தை உணர்ந்து வைத்திருப்பதால்தான். அது ஓரளவுக்கு உண்மையும்கூட. அ.தி.மு.க என்பது முக்குலத்தோர், கவுண்டர்கள், முத்தரையர்கள், அருந்ததியர்கள், மீனவர்கள் ஆகியோரது வாக்குவங்கியால் உருவாக்கப்பட்டது. தற்போது அந்த வாக்கு வங்கியானது சேதாரத்தில் உள்ளது.

“முக்குலத்தோர் வாக்கு என்பது 8 சதவிகிதமாக உள்ளது. அதில் 2 சத வீதம் தான் அ.தி.மு.க பக்கம் உள்ளது. அ.தி.மு.கவில் இவர்கள் ஒன்று சேரவில்லையென்றால், அந்த வாக்குகள் தி.மு.க பக்கம் சென்றுவிடும். பசும்பொன் தேவரின் இறுதி ஊர்வலத்தின்போது பின்னால் அமர்ந்திருந்த இரண்டு அரசியல்வாதிகளில் ஒருவர் அண்ணா, மற்றொருவர் எம்.ஜி.ஆர். அந்தக் காலத்தில் இருந்தே அவர்கள் எம்.ஜி.ஆர் ஆதரவாளர்களாக இருந்தனர். காங்கிரஸ் எதிர்ப்பு காரணமாக முக்குலத்தோர் சமூகம், தி.மு.க பக்கம் இருந்தது. அதில் காமராஜர் எதிர்ப்பும் இருந்தது. 1972ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் தனிக்கட்சி தொடங்கிய போது அந்த வாக்குகள் அ.தி.மு.க பக்கம் சென்றுவிட்டன. அவர்கள் பழையபடி தி.மு.க ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கவும் தயங்க மாட்டார்கள்” என்கிறார்.

### அறக்கட்டளை நிர்வாகத்தில் சசிகலா

“கட்சிக்குள் சசிகலாவை சேர்க்க வேண்டும் என்றுதான் எம்.ஜி.ஆர் குடும்பமும் விரும்புகிறது. கடந்த நான்கு வருடங்களாக எம்.ஜி.ஆரின் நினைவில்லம் அ.தி.மு.க தலைமைக் கழக நிர்வாகிகள் யாரும் எட்டிப் பார்க்கவில்லை. தங்களின் கைக்காசை போட்டுத்தான் எம்.ஜி.ஆரின் வாரிசுகள் நினைவில்லத்தை நடத்தி வருகின்றனர். அ.தி.மு.க தரப்பில் இருந்து அவர்களுக்கு எந்த உதவிகளும் சென்று சேரவில்லை. அண்ணா தி.மு.க தொடர்புடைய பல அறக்கட்டளைகளில் சசிகலா நிர்வாகியாக இருக்கிறார். இதையும் தாண்டி அவரை சேர்த்துக் கொள்ள மாட்டோம் எனக் கூறுவதற்கு எடப்பாடிக்கும் உரிமையில்லை, கே.பி.முனுசாமிக்கும் உரிமையில்லை.

ஆட்சி இருந்த வரையில் இந்தப் பிரச்னைகள் எல்லாம் வெளியில் வரவில்லை. ஆட்சி அதிகாரம் போன பிறகு பிரச்னைகள் வரத் தொடங்கியுள்ளன. இந்தக் கட்சி பிளவை நோக்கிச் செல்லக் கூடாது என்றால் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவது அவசியம்” என்கிறார் ஷ்யாம்.

### அ.தி.மு.க சொல்வது என்ன?

அ.தி.மு.கவில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து, அக்கட்சியின் தலைமைக் கழக பேச்சாளர் ஆவடி குமாரிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். ”பொதுக்குழு எடுத்த முடிவின்படிதான் கட்சி இயங்கிக் கொண்டிருக்கிறது. இதில், எதாவது மாற்றம் செய்ய வேண்டும் என்றால் பொதுக்குழு கூடித்தான் முடிவு செய்யும். மேலும், சட்டமன்றத் தேர்தலின்போது அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டதாக சசிகலா கூறினார். டி.டி.வி. தினகரனும் தனியாகக் கட்சியைத் தொடங்கி நடத்தி வருகிறார். அரசியலில் இருந்தே ஒதுங்கிய சசிகலா, கட்சியில் இருந்து விலகிச் சென்றதாகத்தானே அர்த்தம்?” என்கிறார்.

மேலும், ஓ.பி.எஸ் பேசியதை வைத்து அதனை சர்ச்சை எனக் கூற முடியாது. “யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம்” என அவர் கூறினார். அப்போது, “ஹபொதுக்குழு முடிவு செய்யும்” என அவர் கூறியிருக்க வேண்டும். பொதுக்குழுவில் இருந்து சசிகலாவை நீக்கியிருக்காவிட்டால் தனிப்பட்ட நபர்கள் முடிவெடுக்க வாய்ப்புகள் உள்ளன. இதனை ஒரு பொருளாக முன்வைத்து, பொதுக்குழுவில் விவாதிக்க வேண்டிய சூழல் வந்ததாகத் தெரியவில்லை” என்கிறார் ஆவடி குமார்.

“ஒவ்வோர் ஆண்டும் பொதுக் குழுவை கூட்ட வேண்டும். கடந்த ஆண்டு தேர்தல் காரணமாக விலக்கு பெற்றிருந்தார்கள். அதேநேரம், கட்சியின் செயற்குழு நடந்தது. இந்த ஆண்டு பொதுக்குழுவை கூட்டுவதற்கான வாய்ப்புகள் உள்ளன” என்று பதிலளித்தார் ஆவடி குமார்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

27. கட்டத்தில் 4 முதல் 95 வரையிலான எண்கள் உள்ளன. இவ்வெண்களை பொது வித்தியாசம் 7 ஆக அமையுமாறு கோலமொன்றை உருவாக்க இன்னும் மூன்று எண்கள் தேவைப்படுகின்றன. அவ்வெண்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| 4 | 67 | 74 | |
| 53 | 95 | 39 | 18 |
| 25 | 88 | 32 | 46 |

1) 12, 60, 87  2) 13, 61, 89  3) 11, 60, 81

28. 1ஆம் மாதம், 2ஆம் மாதம் என இலக்கமிடப்பட்ட 12 மாதங்களின் இலக்கங்களையும் வார நாட்களின் மொத்த எண்ணிக்கை குறிக்கும் இலக்கத்தையும் கூட்டி ஐம்பூதங்களின் எண்ணிகையினால் வகுக்கும் போது வரும் விடை யாது?

1) 15  2) 17  3) 18

- **அறிவுறுத்தலைப் பின்பற்றி 29 ஆம், 30ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| நிரல் 1 | நிரல் 2 | நிரல் 3 |
|---|---|---|
| ம | ◇ | ற |
| [cube] | ஆ | கூ |
| ⊗ | 6 | ⊠ |

மேற்படி அட்டவணையில் முதலாம் நிரலிலுள்ளவற்றை இரண்டாம் நிரலுக்கும் இரண்டாம் நிரலிலுள்ளவற்றை முதலாம் நிரலுக்கும் மாற்றுக.

29. மாற்றம் செய்த பின்னர் அட்டவணையின் மத்தியில் இருப்பது

1) எழுத்து  2) இலக்கம்  3) திண்மவுரு

30. ஆரம்பத்தில் இலக்கம் 6 இருந்த இடத்தில் மாற்றத்தின் பின் உள்ளது

1) ⊠  2) ⊗  3) ஆ


31. கண்ணன் எட்டு என்ற எண்ணை 8 தடவை பயன்படுத்தி விடையாக 1000 ஐப் பெற முயற்சி செய்தான். அவ்வாறு பெறுவதற்கு அவன் அடுக்கிய சரியான ஒழுங்கைக் காட்டுவது எது?

1)
8 8
8 8
8 8
8
8

2)
8 8 8
8 8
8 8
8

3)
8 8
8 8 8
8
8
8

32.



இலக்கம் 4 இருக்கும் முகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் இருக்கும் முகத்தில் இருக்கும் இலக்கம் யாது?


1) 2  2) 6  3) 1

33. கோடைகாலத்தில் தாகம் அதிகமாக இருக்கும் இதற்கான காரணமாக அமைவது
1) சூழலில் அதிகளவு பழங்களைக் காண்பதால் ஏற்படும் ஆர்வம்
2) உடலிலிருந்து பல்வேறு வழிகளில் நீர் அதிகளவு வெளியேறுகின்றமை
3) கொண்டாட்டங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றமை

34. A இன் மகன் B. X உம் Y உம் சகோதரர்கள். A இன் சகோதரர் X எனின், B க்கு Y என்ன உறவு முறை?

1) அண்ணா  2) மகன்  3) பெரியப்பா


- **35ஆம் 36 ஆம் வினாக்களுக்கு கீழ் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**



35. வட்டவடிவ அலங்காரம் ஒன்றை அமைப்பதற்காக நூலொன்றில் அலங்காரக் கொடிகள் ஒட்டப்பட் டுள்ளன. இவற்றினை வட்டமாக அமைக்கும் போது ☆ இவ் உருவிற்கு எதிரே இருக்கும் உரு எது?

1) ●  2) ○  3) ▼

36. இவ் உருவை வட்டமாக அமைக்கும் போது வரும் பொருத்தமான உரு எது?



37. மாலதி ஏணியொன்றின் 9ஆவது படியில் நிற்கின்றாள். மேலும் இருபடிகளில் ஏறும் போது நடுவில் நிற்பதாகக் கூறுகிறாள் எனின் அவ்வேணியிலுள்ள படிகள் எத்தனை?

1) 19  2) 21  3) 23

# ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்பதை நடைமுறைப்படுத்த ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி



## 13 உறுப்பினர்களில் ஒரு தமிழர்கூட நியமிக்கப்படவில்லை

கொழும்பு, ஒக். 28

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்பதை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஜனாதிபதி செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான இந்தச் செயலணியில் 13 உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ளது.

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்பதை இலங்கைக்குள் செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து சட்டவரைபைத் தயாரிப்பதற்காகவும், நிதி அமைச்சால் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து திருத்தங்களை முன்வைப்பதற்காகவுமே இந்தச் செயலணி அமைக்கப்பட்டுள்ளது.

மாதம் ஒரு முறை ஜனாதிபதிக்கு இது சம்பந்தமாக அறிக்கை கையளிக்க வேண்டும். 2022 பெப்பரவரி 28 ஆம் திகதிக்குள் இறுதி அறிக்கையைக் கையளிக்க வேண்டும்.

இலங்கை அரசமைப்பின் 33 ஆம் உறுப்புரையில், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்பதற்கான ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரர் தலைமையிலான இந்த செயலணியின் உறுப்பினர்களாக பேராசிரியர் தயானந்த பண்டார, பேராசிரியர் சாந்திநந்தன விஜேசிங்க, பேராசிரியர் சுமேத சிறிவர்த்தன, என்.ஜி. சுஜீவ பண்டிதரத்ன, சட்டத்தரணி இரேஷ் செனெவிரத்ன, சட்டத்தரணி சஞ்ஜய மாரம்பே, எரந்த நவரத்ன, பாணி வேவல, மௌலவி மொஹொமட், விரிவுரையாளர் மொஹொமட் இந்திகாப், கலீல் ரஹ்மான், அஸீஸ் நிசார்தீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

13 பேர் கொண்ட இந்தச் செயலணியில் ஒரு தமிழர்கூட நியமிக்கப்படவில்லை எனக் கடும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

(இ)

# சமிந்த, ஹேஷா ஒருபோதும் அரசுடன் இணையமாட்டார்கள்



## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, ஒக். 28

“ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே ஆகியோர் ஒருபோதும் அரசுடன் இணையமாட்டார்கள்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச்செயலாளர் அசோக அபேசிங்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே ஆகியோர் தொகுதி அமைப்பாளர் பதவிகளை இராஜிநாமா செய்துள்ளனர். இது தொடர்பில் கட்சியின் பொதுச்செயலாளருக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறு தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜிநாமா செய்துள்ள இருவரும் விரைவில் அரசுடன் இணைவார்கள் எனத் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையிலேயே அந்தத் தகவலை ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. அசோக அபேசிங்க மறுத்துள்ளார்.

“ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஜனநாயக் கட்சி. சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே ஆகிய இருவருக்கும் மாவட்டம் தொடர்பில் பிரச்சினை இருக்கலாம். அதனைப் பேசித் தீர்த்துக்கொள்வோம். ஆனால், ஒருபோதும் அரசுடன் இணையமாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்” - என்று அசோக அபேசிங்க எம்.பி. தெரிவித்தார். (இ)

# அரசில் தவறு இடம்பெறும்போது அமைதியாக இருந்திட முடியாது!

## கம்மன்பில எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஒக். 28

“ஐக்கிய தேசியக் கட்சி அரசு செய்யும்போது ‘தவறாக’ இருந்த ஒரு விடயம் எமது அரசு செய்யும்போது சரியாகி விடாது. யார் செய்தாலும் தவறு தவறுதான். எனவே, அரசில் தவறு இடம்பெறும்போது நாம் அமைதியாக இருந்திட முடியாது. தட்டிக்கேட்க எமக்கு உரிமை உண்டு.”

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தொழிற்சங்கப் பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர் விமல் வீரவன்ஸ, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அத்துரலிய ரத்ன தேரர் உட்பட மேலும் பலர் பங்கேற்றனர்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையகத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் தீர்மானத்தை முறியடிப்பது தொடர்பில் இதன்போது தீவிரமாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், இதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் உதய கம்மன்பில,

“ஐக்கிய தேசியக் கட்சி செய்யும்போது தவறாக இருந்த ஒரு விடயம் நாம் செய்யும்போது சரியாகிவிடாது. சரி என்றால் அதை யார் செய்தாலும் சரி. தவறென்றால் அதை யார் செய்தாலும் தவறு. நபர்கள் முக்கியமில்லை.

எம்மால் உருவாக்கப்பட்ட அரசு, எமது அணி எனத் தவறு இடம்பெறும்போது அமைதியாக இருந்தால் அரசிடமிருந்து மக்கள் விலகிவிடுவார்கள். அரசைப் பாதுகாக்கவே நாம் செயற்படுகின்றோம்.

மக்கள் சபைக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி நிச்சயம் நடக்கும்” - என்றார். (இ)

# வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்தவர்களில் 19 பேருக்கு தொற்று

பதுளை, ஒக். 28

பதுளை பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளில் 19 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வந்த 282 பேரில் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 7 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 67 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 12 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் 47 கொரோனாத் தொற்றாளர்கள் குறித்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியர் பாலித ராஜபக்ச தெரிவித்துள்ளார். (இ)

# குளவிக்கொட்டுக்குள்ளான 18 பேர் வைத்தியசாலையில்

புத்தளம், ஒக். 28

புத்தளம், முந்தல் தேவாலய சந்திப் பகுதியில் நேற்றுக் காலை குளவிக் கொட்டுக்கு இலக்கான 18 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முந்தல் வைத்தியசாலையின் பணிப்பாளர் எம்.மாலிங்கம இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

மரமொன்றில் குளவிகள் கூடுக்கட்டியிருந்த நிலையில் அப்பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக குளவிகள் கலைந்து, சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கொட்டியுள்ளன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(இ)

# ஆணின் சடலம் மீட்பு!

கேகாலை, ஒக். 28

கேகாலையில் ஆணின் சடலம் ஒன்று அடையாளம் காண முடியாதவாறு உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

எட்டியாந்தோட்டை - மலல்பொல கிராம உத்தியோகத்தர் பிரிவின் அமுஹேன பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் எட்டியாந்தோட்டைப் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த ருவன்வெல்ல பதில் நீதிவான் நிமல் புஸ்பகுமார, மரண விசாரணையை நடத்தியதையடுத்து, கரவனெல்ல வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று எட்டியாந்தோட்டைப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

(இ)

# ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் நவம்பர் இறுதியில் இலங்கைக்கு

கொழும்பு, ஒக். 28

ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ஒருவர் எதிர்வரும் நவம்பர் இறுதியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், மனித கடத்தல் மற்றும் நவீன முறையிலான அடிமைத்தனம் ஆகிய விவகாரங்களை கையாளும் சிறப்பு அறிக்கையாளரே இவ்வாறு கொழும்பு வருகின்றார்.

அரச மேல் மட்டம், சிவில் அமைப்புகள் உட்பட பல தரப்புகளுடனும் பேச்சுகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ள அவர், தனது பயணத்தின் முடிவில் விசேட அறிக்கையொன்றையும் ஐ.நாவில் கையளிக்கவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

மனித கடத்தல் தொடர்பான வடக்கு அயர்லாந்து சட்டசபை குழு, போதைப்பொருள் மற்றும் குற்றத்துக்கான ஐ.நா. அலுவலகம், இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு என்பனவற்றில் மேற்படி அறிக்கையாளர் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)



## ஐ. எஸ். அமைப்பு தாக்குதல் ஈராக்கில் 11 பொதுமகள் பலி!

தெஹ்ரான், ஒக். 28

ஈரானின் கிழக்கே தியாலா மாகாணத்தின் கிராமம் ஒன்றில் ஐ. எஸ். தீவிரவாதிகள் செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் ஒரு பெண் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர்.

முக்தாதியா நகருக்கு அருகிலுள்ள அல்-ஹவாஷா என்ற கிராமத்திலேயே பொதுமக்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், 11 பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனரெனப் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி ஏந்தியவர்கள் பல வாகனங்களில் வந்து, தானியங்கி துப்பாக்கிகளை கொண்டு கிராமவாசிகளை சரமாரியாக சுட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## 5 வயதுக்கு மேற்பட்டோருக்கு அமெரிக்காவில் தடுப்பூசிகள்!

வாஷிங்டன், ஒக். 28

அமெரிக்காவில் ஐந்து தொடக்கம் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கு அதிகாரிகள் பரிந்துரை செய்துள்ளனர்.

இதற்கு அமெரிக்க உணவு மற்றும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை நிபுணர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, பைஸர் தடுப்பூசியை 05 தொடக்கம் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு ஏற்றுவதற்கான அவசர பயன்பாட்டு அனுமதியை, அடுத்த சில வாரங்களுக்குள் வழங்குவதற்கான வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வயது பிரிவைச் சேர்ந்த சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி பாதுகாப்பானதென்பதை, மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் காண்பிப்பதாக அதன் உற்பத்தி நிறுவனம் கடந்த மாதம் தெரிவித்திருந்தது.

12 மற்றும் அதற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை அமெரிக்கா முன்னரே ஏற்றிவருகின்றது. இந்தநிலையில், தற்போதைய புதிய தீர்மானத்தின் கீழ் 2 கோடியே 80 இலட்சம் அமெரிக்க சிறுவர்கள் தடுப்பூசியை பெறவுள்ளனர். (ஐ)

## இந்திய வம்சாவழி பெண் கனடா அமைச்சரானார்!



ஒன்ராறியோ, ஒக். 28

கனடா நாட்டின் பாதுகாப்பு துறை அமைச்சராக இந்திய வம்சாவழியைச் சேர்ந்த அனிதா ஆனந்த்நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் சமீபத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற்ற நிலையில், ஜஸ்ரின் ட்ரூடோ மூன்றாவது முறையாக அந்நாட்டின் பிரதமரானார்.

இதையடுத்து, ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான புதிய அமைச்சரவை பதவியேற்றுள்ளது.

அமைச்சரவையில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ உள்பட 39 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதில், நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனிதா ஆனந் நியமிக்கப்பட்டுள்ளார். 54 வயதாகும் அனிதா ஆனந்தின் தந்தை தமிழகத்தைச் சேர்ந்தவர்.

லிபரல் கட்சி சார்பில் ஒக்வில்லே (oakville) தொகுதியில் போட்டியிட்ட அனிதா ஆனந்த் 46% வாக்குகள் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பிரேசில் அதிபர் பொல்சனாரு மனிதகுல விரோதம் புரிந்தார்!

## பாராளுமன்ற குழு குற்றச்சாட்டு

பிரேசிலியா, ஒக். 28

பிரேசில் ஜனாதிபதி சயீர் பொல்சனாருவின் மனித குலத்திற்கு எதிரான குற்றம், பெருந்தொற்றை அவர் கையாண்ட விதம் என்பவை குறித்து சட்டபூர்வமாக குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விடயத்திற்கு பிரேசிலின் பாராளுமன்ற குழு ஆதரவளித்துள்ளது.

இந்தக் குழுவின் தலைவர் ஒமர் அசிஸ் பொல்சனாரு மீது சுமத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை பிரேசிலில் குற்றங்கள் குறித்து விசாரிக்கும் சுயாதீன விசாரணை அமைப்பின் தலைவரிடம் ஒப்படைக்கவுள்ளார்.

ஆனால்,பொல்சனாரு தன்மீது எந்தக் குற்றமும் இல்லை என்று மறுத்து வருகின்றார். இந்தக் குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கம் கொண்டவை என அரச தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த வாக்கெடுப்பால் பொல்சனாருமீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது உறுதியாக தெரியவில்லை. ஏனெனில், இந்தப் பரிந்துரை அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அது நிச்சயம் அவருக்கு ஆதரவாகவே இருக்கும் என்று கருதப்படுகிறது. ஏனெனில், அவரை பொல்சனாருவே நியமிக்கவுள்ளார்.

பொல்சனாரு மீது மனித குலத்திற்கு எதிரான குற்றம் மட்டுமின்றி, வேறு 8 குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன. குற்றத்தை தூண்டியமை, ஆவணங்களை போலியாக மாற்றுமை, சமூக உரிமைகள் மீறல், பொது நிதியை தவறாக பயன்படுத்தல், பெருந்தொற்று தொடர்பில் தவறான தகவல்கள் பரப்பியமை என அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

1,300 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில் ஜனாதிபதி பொல்சனாரு மீதும் அவரின் 3 மகன்கள் உட்பட 77 பேர் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாகிஸ்தானுக்கு ரூ. 60,000 கோடி நிதியுதவி அளிக்கிறது சவுதி!

ரியாத், ஒக். 28

பாகிஸ்தானுக்கு 300 கோடி டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாயை உதவியாக வழங்குகவுள்ளது சவுதி அரேபியா.

கடந்த 2019ஆம் ஆண்டு பாகிஸ்தான் மற்றும் சர்வதேச நாணயவியல் கழகம் இடையே 600 கோடி அமெரிக்க டொலர் மதிப்பிலான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் அதனைத் தொடர்ந்து அந்த ஒப்பந்தம் தொடர்பாக எத்தகைய பேச்சும் இடம்பெறவில்லை.

இந்நிலையில் சர்வதேச நாணயவியல் கழக ஒப்பந்தத்தின்படி சவுதி அரேபிய அரசாங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு 300 கோடி அமெரிக்க டொலர்கள் நிதியுதவி அளிக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

முன்னதாக கடந்த 2018ஆம் ஆண்டு சவுதி அரேபியா ஏற்கெனவே 300 கோடி அமெரிக்க டொலர்கள் நிதியுதவியும், அந்நிய செலாவணி கையிருப்புக்கு 300 கோடி அமெரிக்க டொலர்களையும் வழங்கியிருந்தது.



அப்போதைய சூழலில் இரு தரப்பு உறவிலும் விரிசல் ஏற்பட்டதால் பாகிஸ்தான் 200 கோடி அமெரிக்க டொலர்களை திருப்பியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூகுளின் தாய்நிறுவனத்திற்கு 378,000 கோடி ரூபாய் இலாபம்!

வாஷிங்டன், ஒக். 28

ஒழுங்குமுறை விதிகளால் கூகுளின் தாய் நிறுவனமான அல்பாபெட் பல கட்டுப்பாடுகளுக்கு உள்ளானது. இந்தநிலையில், கொரோனா பரவலால் அதன் வேலை முறைமையும் மாறுதலடைந்தது. இந்த சவால்களுக்கு மத்தியில் 1890 கோடி டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 3 இலட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயை இலாபமாக பெற்றுள்ளது அந்த நிறுவனம்.

கூகுள் தேடுபொறி, யூ ரியூப், விளம்பர சந்தை என்பவை அல்பாபெட் நிறுவனத்திற்கு சொந்தமானவை. செப்ரெம்பரில் முடிவடைந்த காலாண்டில் அந்த நிறுவனம் 651 கோடி டொலர்களை இலாபமாக ஈட்டியது. இது கடந்த ஆண்டில் இதே காலாண்டில் பெற்ற இலாபத்தை விட 41சதவீதம் அதிகமாகும்.

# பல பாடசாலைகளில் கொரோனா பரவல்!

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக். 28**

**நாட்டில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கை ஆரம்பித்த பல பாடசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று உருவாகியுள்ளது என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.**



ஆரம்பப் பாடசாலை மாணவர்களில் பலருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது எனச் சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜயசிங்க சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன்னும் 6 முதல் 13 வரையிலான வகுப்புகளுக்குக் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான பரிந்துரைகள் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், சில பாடசாலைகளில் அதிபர்கள், மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அழைக்கவுள்ளனர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது எனவும், இதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை அதிபர்கள், ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

## டிப்பருடன் மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் மரணம் வயோதிபர் காயம்

புத்தளம், ஒக். 28

மோட்டார் சைக்கிள் ஒன்று, டிப்பர் வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார் அத்துடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம் - மன்னார் வீதி, பஸ்பராபத் சந்தியில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான புத்தளம், வேப்படுமவ பிரதேசத்தை சேர்ந்த 28 வயது இளைஞரே உயிரிழந்தார்.

குறித்த நபருடன் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த 70 வயது வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் ரக வாகனத்தின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 28

சிறகுகள் அமையத்தின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் 3ஆவது 'அவள்' கலந்துரையாடல் நிகழ்வு 'மார்பக புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு' எனும் தலைப்பில் இணையவழியூடாக இன்று வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வளவாளராக மருத்துவர் தனேந்திரன் (புற்றுநோயியல் சத்திர சிகிச்சை நிபுணர்) அவர்கள் கலந்து கொள்வார்.

இந்த நிழ்வில் சூம் செயலியூடாக 870 1529 4496 என்ற அடையாள எண்ணை பயன்படுத்தி இணைந்துகொள்ள முடியும். (ஐ)

## ஜனாதிபதி செயலணியில் பெயருக்குக்கூட தமிழ் பிரதிநிதி ஒருவரேனும் இல்லையே!

### மனோ கணேசன் எம். பி. கடும் விசனம்

கொழும்பு, ஒக். 28

'ஒரே நாடு- ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரேனும் நியமிக்கப்படாமை குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் விசனம் தெரிவித்துள்ளார்.

அரசின் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறையாக்குவதற்காக ஆராய்ந்து, அறிக்கை சமர்பிக்கும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியை நியமித்துள்ளார்.

குறித்த செயலணியில் 'பொதுமன்னிப்பு பெற்ற (பாவமன்னிப்பு?) ஞானசார தேரரைத் தலைவராகவும், ஒன்பது சிங்கள நபர்களும், நான்கு முஸ்லிம்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தமிழரின் பெயரும் இல்லை என்று மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.



"முஸ்லிம் பெயர்கள் இருக்கின்றன என்பதாலேயே முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்கப்படப் போகின்றது என்பதல்ல.

உண்மையில் முஸ்லிம்களைத்தான் இங்கே குறி வைக்கிறார்கள். அதற்குக் கூடவே துணைக்கு சில முஸ்லிம்களை வைத்துக்கொள்ளப் போகின்றார்கள் என்பதுவே பட்டவர்த்தனம்.

ஞானசாரரைத் தலைவராக போட்டால், உள்ளே என்ன நடக்கும் எனப் புதிதாக வகுப்பெடுக்க தேவையில்லையே. பையைத் திறக்காமலேயே பைக்குள் என்ன இருக்கின்றது என விளங்குகின்றது" என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் 'பேஸ்புக்' பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பெயருக்குக்கூட ஒரு தமிழரை நியமிக்க மறுக்கும் இந்த மனிதரின் வெறுப்பு மனப்பான்மை வெறுப்பூட்டுவதாகவும் மனோ எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## புதிதாக ஐந்து விமான சேவைகள் இந்த வருட இறுதிக்குள் ஆரம்பம்

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

இந்த வருட இறுதிக்குள் மேலும் 5 புதிய விமான சேவை நிறுவனங்கள் இலங்கைக்கான விமான சேவைகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்தே அவர் இதனைக் கூறினார்.

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பலனாகவே இவ்வாறு 5 நிறுவனங்கள் இலங்கைக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதன்படி, நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சுவிட்சர்லாந்தின் எடில்வயிஸ் விமான சேவை நிறுவனம்,



ரஷ்யாவின் எயாரோ ப்லோட் விமான சேவை நிறுவனம், பிரான்சின் எயார் பிரான்ஸ் விமான சேவை நிறுவனமும், ரஷ்யாவின் எயார் அசுர் நிறுவனமும் இவ்வாறு விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடுமையான சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இவ்வாறான விமான சேவைகளை முன்னெடுப்பதன் ஊடாக தேசிய பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்க முடியும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ)

## ஞானசார தேரரின் நியமனம் மிகவும் கண்டிக்கத்தக்கது!

### முஷாரப் எம். பி. தெரிவிப்பு

அம்பாறை, ஒக். 28

'விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட "ஒரே நாடு - ஒரே சட்டம்" என்பதற்கான செயலணியின் தலைவராக கலகொடை அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளமை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.'

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையானது ஞானசார தேரர் குறித்து நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்துள்ளது. அதேவேளை, நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்ற ஒருவரே ஞானசார தேரர்.

இது மட்டுமன்றி ஞானசார தேரர் இஸ்லாமிய நம்பிக்கைகள் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பாகத் தொடர்ச்சியான வெறுப்புப் பிரசாரராகத் தொழிற்பட்டு வரும் ஒருவர்.

அவ்வாறான ஒருவர் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான செயலணிக்கு தலைமை தாங்க எந்த விதத்திலும் பொருத்தமற்றவர். ஜனாதிபதியின் இந்த நிய மனம் பொருத்தமற்றதும் கண் டனத்துக்கும் உரியது' - என்றார். (இ)

## எஸ்.ரி.எவ்பின் சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 5 பேர் சிக்கினர்

கொழும்பு, ஒக். 28

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, கொழும்பு மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 33 லீற்றர் 500 மில்லிலீற்றர் மதுபானத்துடன் மஹரகம பிரசேத்தை சேர்ந்த 26 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது 165 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு வெலிக்கடை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், தீர்வை வரியின்றி நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 35 புகைத்தல் பொருட்களுடன், கோட்டை பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 195 கிராம் மதனமோதகம், மதுபானம் என்பவற்றுடன், எதுல்கோட்டை பிரதேசத்தை சேர்ந்த 45 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வித்தியாலம் மாவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 50 மில்லிகிராம் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அளுபொல்ல பிரதேத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 6 கிராம் 480 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மோதரவில பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# மரண வீட்டில் பங்கேற்ற 35 பேருக்கு கொரோனா

கம்பஹா, ஒக். 28

கம்பஹா, மினுவாங்கொடை ஹோரம்பெல்லை நவலோக பிரதேசத்தில், வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் மரண வீட்டில் கலந்துகொண்ட 35 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுப்படுத்தப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இதனைத் தெரிவித்துள்ளது.

மரண வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு வாரத்துக்குப் பின்பு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மரண வீட்டில் பங்கேற்றவர்களில் சிலருக்குத் தொண்டை நோவு, காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து மரண வீட்டில் பங்கேற்றவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 35 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மரண வீட்டுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்து பலர் வருகை தந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

எனவே, இந்த மரண வீட்டில் பங்கேற்றவர்களின் விவரங்களைச் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திரட்டி வருகின்றனர். (இ)

துப்பாக்கிச்சூடு சந்தேகநபர் தொடர்பில்

# தகவல் வழங்குவோருக்கு 25 இலட்சம் ரூபாய் சன்மானம்

கொழும்பு, ஒக். 28

கொழும்பு, முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீகஹவத்தையில், நேற்றுமுன்தினம் காலை 6.15 மணியளவில், வீடொன்றுக்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பிரதான சந்தேகநபர் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு 25 இலட்சம் ரூபாய் பணப்பரிசு வழங்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

மீகஹவத்தையில் பொலிஸாரைப் போன்று வேடமணிந்து நேற்று வீடொன்றுக்குள் புகுந்த இருவர் அங்கிருந்தோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில், பிரதான சந்தேகநபர் குறித்த தகவல்களை வெளியிட்டுள்ள பொலிஸ் திணைக்களம், அவரைக் கைது செய்வதற்காகப் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

பொன்னம்பெரும ஆராச்சிகே தொன் தனுஸ் புத்திக நொஹான் ஜிலே என்ற 30 வயதுடைய நபரே இவ்வாறு தேடப்பட்டு வருகின்றார்.



அவரது அடையாள அட்டை இலக்கம் 911854481 ஏ எனப் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சந்தேக நபர், முல்லேரியா, உடுமுல்ல, மாலபே ஆகிய பகுதிகளில் வசித்து வந்துள்ளார்.

சந்தேகநபர், இரு கைகளிலும் தோற்பட்டை முதல் மணிக்கட்டுவரை பச்சை குத்தியுள்ளார்.

மேலும், அங்கொடை, ஹிம்புட்டான, முல்லேரியா, வெலிகம, மிதிகம, ஹிக்கடுவ, காலி ஆகிய பகுதிகளுக்கு அடிக்கடி சென்று வருபவர் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர் தொடர்பில் தகவல் தெரிந்தோர் 0718591727, 0777370360, 0718592279 ஆகிய இலக்கங்களுடன் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர், மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவு பணிப்பாளர் ஆகியோரைத் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ)

தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின்

# புதிய பணிப்பாளராக ஷர்மிலா ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 28

தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக ஷர்மிலா ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஷர்மிலா ராஜபக்ஷ இன்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இவர் ஜனாதிபதி செயலகத்தின் சமூக ஊடகப் பிரதானியாகக் கடமையாற்றியவர்



என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த இஷினி விக்கிரமசிங்க பதவி விலகியமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஷர்மிலா நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

# சிறையில் ரஞ்சனுக்கு ஆபத்து நடந்தால் அரசுதான் பொறுப்பு

## அவரை பொதுமன்னிப்பில் விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் திஸ்ஸ எம். பி. வலியுறுத்து



**கொழும்பு, ஒக். 28**

**'சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும். அவருக்கு அங்கு ஆபத்து நடந்தால் அரசே முழுப்பொறுப்பு.'**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம். பி. தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

'ரஞ்சன் ராமநாயக்க கொள்ளை அடித்துவிட்டோ, ஊழல், மோசடியில் ஈடுபட்டுவிட்டோ, சமூக விரோத செயலை முன்னெடுத்தோ சிறை தண்டனையை எதிர்கொள்ளவில்லை. மாறாக அரசியல் விடயங்களுக்காகவே தண்டனையை அனுபவிக்கின்றார். நீதிமன்றத் தீர்ப்பை நாம் விமர்சிக்கவில்லை என்பதையும் கூறியாகவேண்டும்.

ரஞ்சன் ராமநாயக்க ஊழல், மோசடிகளுக்கு எதிராகப் போராடியவர். தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக அவரே கூறியுள்ளார். அதேபோல் கடந்தகாலங்களில் சிறைச்சாலைக்குள்ளேயே கைதிகள் கொல்லப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வெளியில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு நடந்துள்ளன. எனவே, ரஞ்சனுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். அவரின் உயிர் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அரசு வழங்க வேண்டும்.

ரஞ்சன் மக்களால் விரும்பப்பட்ட ஒருவர். எனவே, அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும். ஏற்கனவே இந்தக் கோரிக்கையை விடுத்தோம். மீண்டும் ஒரு முறை முன்வைக்கின்றோம்.

ஜனாதிபதி இதனைச் செய்தால் மக்கள் எதிர்க்க மாட்டார்கள். மாறாக ஜனாதிபதிக்கான புகழ் அதிகரிக்கும்" - என்றார். (இ)

# காணி விடுவிப்பு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக். 28

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

குறிப்பாக, ஆனைவிழுந்தான் பகுதியில், வனவள திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 600 ஏக்கர் வரையான நிலபரப்பு மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களில் வனவளத் திணைக் களத்தால் கையகப் படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (இ)

# சிறில் காமினி ஆயர் சி.ஐ.டி. விசாரணைக்கு

கொழும்பு, ஒக். 29

சிவில் சமூக செயல்பாட்டாளர் சிறில் காமினி ஆயருக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் சுரேஷ் சலே மேற்கொண்ட முறைப்பாடு ஒன்றுக்கு அமையவே, சிறில் காமினி ஆயர் சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி கோரி நடத்தப்பட்ட ஊடக சந்திப்பொன்றில் சிறில் காமினி ஆயர்



வெளியிட்ட கருத்து தொடர்பில், சுரேஷ் சலே சி.ஐ.டியில் முறையிட்டுள்ளார்.

அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சி.ஐ.டியினர் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர். (இ)

# டெங்கு நோய் பரவல் அதிகரிப்பு!

## வீட்டு சூழலை பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஒக். 28

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையுடன் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வீட்டுச் சூழலைப் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி நுளம்புகள் பெருகும் இடங்கள் இருப்பின் அந்த வீடுகளில் இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சங்கத்தின் உப தலைவர் எச்.ஏ.யு.பி.குலதிலக தெரிவித்தார்.

இதனிடையே கடந்த 26 நாட்களில் 2 ஆயிரத்து 228 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இதில் அதிகமான தொற்றாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர் என்று குறித்த பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த மாதம் கொழும்பு மாவட்டத்தில் 856 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 476 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 209 பேரும் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ள நிலையில், நீர்கொழும்பு வைத்தியசாலையின் டெங்கு நோய்க்கு சிகிச்சை அளிக்கும் 2 விடுதிகளிலும் நோயாளர்கள் நிரம்பியுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, டெங்கு அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமுதாய மருத்துவ நிபுணர் ஷிரந்தி செனவிரத்ன தெரிவித்துள்ளார். (இ)

## மனிதகுல விரோத...

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டு - தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் 200 தமிழர்கள் சார்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற குளோபல் றைற்ஸ் கொம்ப்ளைன்ஸ் எல். எல். பி. (Global Rights Compliance LLP) என்ற அமைப்பால் ரோம் சட்டத்தின் 15ஆவது சரத்தின் (Article 7 of the Rome Statute) கீழ் இந்த சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் பலர் உட்பட பல சிரேஷ்ட இலங்கை அதிகாரிகள், "கடத்தல்கள், சட்டவிரோத காவலில் வைத்தல் மற்றும் சித்திரவதை போன்ற மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் என்று இந்த சமர்ப்பணம் கூறுகின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் தாம் எதிர்கொண்ட துன்புறுத்தல்களின் தீவிரம் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி இங்கிலாந்தில் தஞ்சம் அடைவதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழியிருக்கவில்லை என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கமால் குணரத்ன தலைமையிலான இலங்கைப் படையினரின் அச்சுறுத்தல்கள், சித்திரவதைகள் மற்றும் துன்புறுத்தல் கொள்கைகளின் விளைவாக பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதற்கான உரிமையை இழந்தனர். இலங்கையில் வசிக்கும் தங்கள் அன்புக்குரியவர்கள் துன்புறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாவதாலும், இங்கிலாந்தில் தங்கள்மீது தொடரும் கண்காணிப்பு, துன்புறுத்தல்களாலும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து அவதிப்படுகின்றனர்.

இந்தக் குற்றங்கள் ஐ.சி.சியின் சட்டங்களுடன் இணங்கும் இங்கிலாந்து எல்லைக்குள் ஓரளவு செய்யப்பட்டுள்ளன என்பதால் இக்குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் சமர்ப்பணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இதுபோன்ற முக்கியத்துவம் வாய்ந்த சமர்ப்பணம் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். வழக்கறிஞர்களும் இதேபோன்ற சமர்ப்பணத்தை பிரிட்டன் பெருநகர பொலிஸாரின் போர்க் குற்றக் குழுவிடமும் சமர்ப்பித்துள்ளனர்.

பெரும் அட்டூழியங்களுக்கு காரணமானவர்கள்மீது இலங்கை அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்க செய்வதில் சர்வதேசம் பல முயற்சிகளின் பின் தோல்வியடைந்தது. எனவே, இந்த விவகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைக்கப்படவேண்டும் என்பதே உயிர் பிழைத்த - பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது.

எனினும், ஐ.சி.சி உலகெங்கும் உள்ள ஒருசில வழக்குகளிலேயே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கை ரோம் சட்டத்தை ஏற்காமையால் அங்கு நடந்த குற்றங்களை விசாரிப்பது என்பது கடினமானது. ஆனால், மியன்மார் விவகாரத்தால் மற்றொரு சாத்திய வழி உள்ளது. மியன்மார் ரோம் சட்டத்தை ஏற்காத போதிலும், ரொஹிங்கிய அகதிகள் இடம்பெயர்ந்து வாழும் பங்களாதேஷை எல்லையாகக் கொண்டு வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. இந்த நடைமுறை இலங்கை விடயத்திலும் பொருந்தும்.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்து 12 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இப்போது அவர் இலங்கையின் தலைவராக உள்ளார். மருத்துவமனைகள்மீது எறிகணை வீச்சு , பரவலான பாலியல் வன்முறைகள், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட அல்லது காணாமல் ஆக்கப்படல் என அவரின் மேற்பார்வையில் நடந்த தாக்குதல்களுக்கு யாரும் பொறுப்பேற்கவில்லை.

இன்னமும், லண்டன் மற்றும் சர்வதேசம் முழுவதிலும், தாயகத்திலும் வாழும் தமிழர்கள் பொறுப்புக்கூறலையும் நீதியையும் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், எதிர்வரும் 2021 ஒக்ரோபர் 31 முதல் நவம்பர் 12ஆம் திகதி வரையில் பிரித்தானியாவின் ஸ்கொட்லாந்து, கிளாஸ்கோ நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 2021 காலநிலை மாற்ற மாநாட்டில் (COP26) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார். இவ்வாறான நிலையிலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இந்த சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

எனினும், ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற அடிப்படையில் சர்வதேச இராஜதந்திர சலுகைகளை கோட்டபாய ராஜபக்ஷ கொண்டுள்ளார். இதனால், அவரைக் கைது செய்வது சாத்தியமில்லை என சில சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

## அரசியல்...

டம் உருவாக்கத்துக்கான சட்ட வரைவு தயாரிக்கப்படும். புரையோடிப்போயுள்ள பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்த தீர்மானம் மகிழ்வுக்குரியது என 'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

விசேட ஜனாதிபதி செயலணி நியமனம் தொடர்பில் கொழும்பில் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

சட்டத்தின் முன் அனைத்து இன மக்களும் சமமாக மதிக்கப்படவேண்டும். நபர்களுக்கு மத்தியில் இனம், மதம், மொழி ஆகிய வரையறுக்கப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபாடுகள் காணப்படும்போது அவ்விடயத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

கடந்த காலங்களில் அவ்வாறான தன்மைகள் சமூகத்தின் மத்தியில் காணப்பட்டதை பல்வேறு காரணிகள் ஊடாக அறிந்துகொள்ளலாம்.

இலங்கையினுள் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையை உறுதிப்படுத்துவதற்கு இதுவரை முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் பல்வேறு காரணிகளினால் தோல்வியடைந்தன.

ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவதில் அரசியல் காரணிகளும், அரசியல் நோக்கங்களும் ஒருபோதும் செல்வாக்கு செலுத்தக் கூடாது.

ஒரே-நாடு, ஒரே சட்டத்தை நிலைநாட்ட ஜனாதிபதி இந்த செயலணியை நியமித்துள்ளமை மகிழ்வுக்குரியது. அனைத்து இன மக்களின் மதம், கலாசாரம் மற்றும் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது அவசியமாகும்.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் முரண்பாடற்ற விதத்தில் ஒரே நாடு - ஒரே சட்டம் உருவாக்கத்துக்கான சட்ட வரைவு தயாரிக்கப்படும். அனைத்து தரப்பினரும் அந்த இலக்கை அடைய ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

இதுவரை காலமும் புரையோடிப்போயிருந்த பிரச்னைகளுக்கு இனிவரும் காலங்களிலாவது சிறந்த தீர்வை பெற்றுக்கொள்ளவேண்டும். அனைத்து விடயங்களையும் அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்து ஒருபோதும் தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது- என்றார். (அ)

## பருத்தித்துறையில்...

தன் (வயது- 45) என்பவரே இவ்வாறு தொற்றால் மரணமானார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு உடல்நலக் குறைவு காரணமாக அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேரக்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார்.

இதைத் தொடர்ந்து, நடத்தப்பட்ட அன்ரிஜென் பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா நேற்று விசாரணைகளை நடத்தியதுடன், உடற்கூற்று பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். (ஐ-02)

# 559 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு , ஒக். 28

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 559 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 38 ஆயிரத்து 320 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 373 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 4 ஆயி ரத்து 376 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## பயங்கரவாத...

குழு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமைகள்மீதான அதன் தாக்கம் குறித்து விசாரித்தது.

இலங்கை பற்றி பேசிய அம்பிகா சற்குணநாதன் வரலாற்று ரீதியாக தமிழர்களுக்கு எதிராகவும், 2019 ஏப்ரலில் ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராகவும் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

நீதிபதி முன்பாக முற்படுத்தாமல் "தன்னிச்சை"யாக கைது செய்து 18 மாதங்கள் வரை காவலில் வைக்க பயங்கரவாத தடைச்சட்டம் அனுமதிக்கிறது. தன்னிச்சை என்ற வார்த்தையை பயன்படுத்த காரணம், விசாரணையின்போத கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் அல்லது நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் கைது இடம்பெறுவதில்லை என்பதே. வெஸ்டர்ன யூனியனில் பண பரிமாற்றத்தை செயல்படுத்தியவர், மோட்டார் சைக்கிளை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விற்றவர் அல்லது அவருடன் தொடர்புபட்டவர் என பயங்கரவாத தடை சட்டத்தின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட நபருடன் தொடர்பு கொண்டவர்களும் இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அரபு மொழி புத்தகங்கள் அல்லது அல்லாஹ்வை புகழும் அரேபிய பாடல்கள் வைத்திருந்தவர்களும் கைதாகினர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்படும்போது உரிய நடைமுறைகள் எப்போதும் மீறப்படுவனவாகவும், விசாரணையின்போது ஓர் உதவி காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு மேல் உள்ள பொலிஸ் அதிகாரியிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தை ஆதரமாக ஒப்புக்கொள்ளவும் அந்த சட்டம் அனுமதிக்கிறது.

இதன் விளைவாக வாக்குமூலம் பெறுவதற்கான நபர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர். வாக்குமூலத்தை நிருபிக்க குற்றம்சாட்டப்பட்ட நபரிடம் வற்புறுத்தி கையொப்பம் பெறப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறைச்சாலைகள் பற்றிய ஆய்வின்படி, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 84 வீத ஆண்கள் கைதின் பின்னர் சித்திரவதைகளுக்கு ஆளாகினர் எனக் கூறினர். இவர்களில் 90 வீதமானோர் தாம் கையொப்பமிட்டனர் என்று தெரிவித்தனர். சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த 95வீதமானோர் அந்த வாக்குமூலம் தமக்கு தெரியாத சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தது என்றும் அதில் என்ன எழுதப்பட்டது என்றும் விளக்கப்படவில்லை என்றும் கூறினர்.

மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ, நிகழ்வுகளில் பேசுவதையோ அல்லது ஒரு நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குவதையோ தடுக்க கட்டுப்பாடுகள் பயன்படுத்தப்படலாம். இத்தகைய உத்தரவுகள் உரிய நடைமுறை வெளிப்படைத் தன்மை பொறுப்புக் கூறல் இல்லாமல் தன்னிச்சையாக குடிமக்களின் உரிமைகளை குறைக்க அனுமதிக்கப்படுகின்றன.

மேலும், நீதிமன்ற காவலில் உள்ளவர்களை விசாரணைக்காக வேறு எந்த இடத்திற்கும் அழைத்து செல்ல சட்ட அமுலாக்க அதிகாரிகளால் முடியும். நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட பின்னரும் ஒரு நபரின் தடுப்பு காவல் இடத்தை தீர்மானிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை பயங்கரவாத தடுப்பு சட்டம் அனுமதிக்கிறது. இது நீதிமன்ற காவலில் இருந்து ஒரு நபரை நீக்குகிறது. அத்துடன், நீதித்துறையின் உத்தரவை மீற பாதுகாப்பு செயலருக்கு அதிகாரம் அளிக்கிறது.

குறிப்பாக பயங்கரவாதத்தை எதிர்க்கும் போர்வையில் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையான தமிழ் மக்களை பயங்கரவாத தடைச்சட்டம் மிரட்டும் ஆயுதமாக பயன்படுகின்றது. அத்துடன், ஊடக சுதந்திரம், சிவில் சமூக செயல்பாடுகளையும் இது பாதிக்கிறது என்று அம்பிகா குறிப்பிட்டார். (ஐ)

## ஈஸ்டர...

வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸாரினால் செய்யக்கூடிய நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன. அனைத்து விசாரணைகளும் பூர்த்தி செய்யப்பட்டு சட்ட மா அதிபரிடம் அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஐந்து மேல் நீதிமன்றங்களில் 9 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கான திட்டத்தை வகுத்த 24 தீவிரவாதிகளுக்கு எதிராக ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய குழுவொன்று நாள் தோறும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

பொலிஸ் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவிட்டன, இனி சட்ட மா அதிபரின் கைகளிலேயே தங்கியுள்ளது-என்றார். (அ)

## 3 நாள்களுக்கு...

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு காரணமாக குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக உருவாகியுள்ளதே இதற்கு காரணம் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, இன்று நாட்டின் பல பகுதிகளில் குறிப்பாக மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

சில பிரதேசங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் காலையிலும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்யும் அபாயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை எச்சரித்துள்ளது. (அ)

## கோட்டாபயவுக்கு...

வெளியான 'தி ஹெரால்ட்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் நவம்பர் 12ஆம் திகதி வரையில் பிரிட்டனின் ஸ்கொட்லாந்து, கிளாஸ்கோ நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 2021 காலநிலை மாற்ற மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொள்கிறார்.

இதன்போது அவருக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கும் நடவடிக்கையில் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதன் பின்னணியிலேயே பிரிட்டனின் பிலபல ஊடகமான 'தி ஹெரால்ட்' பத்திரிகையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு

# நமீபியாவிடம் வீழ்ந்தது ஸ்கொட்லாந்து!

அபுதாபி, ஒக். 28

ஸ்கொட்லாந்து அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது நமீபியா அணி.

உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 12 சுற்றில் குழு 2இற்கான போட்டியில் ஸ்கொட்லாந்து - நமீபியா அணிகள் நேற்றிரவு மோதின. அபுதாபியில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நமீபியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

உலகக் கிண்ணத் தொடரில் தகுதி சுற்று அல்லாத அடுத்த சுற்றில் இரு அணிகளும் விளையாடுவது இதுவே முதன்முறை. எனினும், 110 என்ற ஓட்ட இலக்கை துரத்த நமீபியா கடினப்பட்டாலும், 5 பந்துகள் மீதமிருந்த நிலையில் அந்த அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட் லாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

நமீபியா அணி 19.1 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

துரத்தியடித்த நமீபியா அணி திணறலான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. எனினும் அந்த அணிக்கு தொடக்கம் கொடுத்த கிரைக் வில்லியம்ஸ் 23, மைக்கல் வான் லிங்கன் 18 ஓட்டங்களை எடுத்தனர்.

பின்னர், வந்த நடுவரிசை வேகமாக விக்கெட்களை பறிகொடுத்தது. எனினும், சற்றுத் தாக்குப்பிடித்த டேவிட் வைஸ் 16 ஓட்டங்களை எடுத்தார். ஜே. ஜே. ஸ்மித் 23 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளை அடித்து ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணிக்கு மத்தியூ குரோஸ் 19 ஓட்டங்களை பெற மறுமுனையில் ஜோர்ஜ் முன்செய் 0, கலும் மக்லியோட், றிச்சி பெறிங்ரன் 0 என ஆட்டமிழந்தனர்.

6ஆவது விக்கெட்டுக்காக சேர்த்த மைக்கல் லீஸ்க் - கிறிஸ் கிரேவ்ஸ் இணை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. லீஸ்க் 4 பௌண்ட்ரி, 2 சிக்ஸர்களுடன் 44 ஓட்டங்களையும், கிரேவ்ஸ் 25 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

நமீபியாவின் பந்துவீச்சில் ட்ரும்பெல்மன் 3 விக்கெட்களை, பிறைலிங்க் 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)





# இங்கிலாந்து இரண்டாவது வெற்றி!




அபுதாபி, ஒக். 28

124 ஓட்டங்களுக்கு பங்களாதேஷ் அணியை கட்டுப்படுத்திய இங்கிலாந்து, 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 12 சுற்றில் குழு 1இற்கான போட்டியில் இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகள் நேற்றிரவு மோதின.

அபுதாபியில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 9 விக்கெட்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது.

இலகுவான இலக்கைத் துரத்திய இங்கிலாந்து 14.1 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

துரத்தலை தொடங் கிய இங்கிலாந்து அணிக்கு அதிரடி தொடக்கம் கொடுத்தார் ஜசன் றோய். அவர் 3 சிக்ஸர்களையும் 5 பௌண்ட்ரிகளையும் விளாசி 61 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். மறுமுனை யில் வந்த பட்லர் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

டேவிட் மலன் 28 ஓட்டங்களையும், ஜொனி பெயர்ஸ்ரோ 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

முன்னதாக ஆடிய பங்களாதேஷின் தொடக்க வீரர்களான லிற்றன் டாஸ் (9 ஓட்டங்கள்), முஹமட் நயீம் (5) மூன்றாவது ஓவரில் அடுத்தடுத்த பந்துகளில் வீழ்த்தினார் மொயின் அலி.

நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த முஸ்பிஹூர் ரஹ்மான் (29) , மஹ்முதுல்லா (19) பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆனாலும் அவர்களால் நிலைக்க முடியவில்லை. மில்ஸ் (3 விக்கெட்) லிவிங்ரன் (2) பந்துவீச்சுகளை சமாளிக்க மாட்டாமல் 124 ஓட்டங்களையே பெற்றது.

போட்டியின் நாயகனாக 61 ஓட்டங்களை குவித்த ஜசன் றோய் தெரிவானார். (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- முண்டாசுபட்டி,நாய்கள் யாக்கிறதை திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டை டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்